இந்தியா ஏன்
சுவிசேஷமயமாக்கப்படவில்லை?

ஆசிரியர் : ராய் வர்கீஸ்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆசிரியரின் பிற நூல்கள்

₹ 70

₹ 60

₹ 80

₹ 70



₹ 70

₹ 80

இந்தியா ஏன் சுவிசேஷமயமாக்கப்படவில்லை?

ஆசிரியர் : ராய் வர்கீஸ்

இந்தியா ஏன் கிறிஸ்தவமயமாக்கப்படவில்லை?
(தமிழ்)

All rights reserved

இம்மானுவேல் மிஷன் வெளியீடுகள்
அம்பாலா, ஹரியானா.

முதல் பதிப்பு: நவம்பர் 2018

பதிப்புகள் : 1000

நீங்கள் இந்தப் புத்தகத்தை
கீழ்க்கண்ட முகவரியில்
அல்லது இ-மெயில் மூலமாகவும்
வாங்கிக்கொள்ளலாம்.

இம்மானுவேல் மிஷன் குழு
No.779, கௌவுலா, ஜூல்லி,
அம்பாலாசிட்டி,
ஹரியானா 134005,
மொபைல் - 09501482423

E-mail :immanuelmissionteam2@gmail.com
Website : immanuelmissionteam.in
அல்லது
ராய் வர்கீஸ், வீட்டுநம்பர். 812,
முப்படை நகர் Extn., திருப்பதி தெரு,
வெள்ளானூர், ஆவடி,
சென்னை, தமிழ்நாடு - 600062.
மொபைல்: 98848 83990

விலை :ரூ 50/-

Printed by: PAUL DESIGNERS
Sivakasi - 626 189 Cell:94425 76065

முன்னுரை

சத்தியத்தை அறிவீர்கள்! சத்தியம் உங்களை விடுதலை யாக்கும். (யோவான் 8:32). இந்த புத்தகத்தை வாசிக்கிற அனை வரையும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன். இந்த புத்தகத்தின் மூலம் யாவரையும் குறைகூறவோ கேலி செய்யவோ நான் விரும்பவில்லை. ஆனால் நான் தனிப்பட்ட முறையில் பார்த்து அனுபவித்ததை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். இந்த சத்தியங்களை புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

உபவாச ஜெபத்துடன் இந்த புத்தகத்தை எழுதி முடிக்க உதவி செய்த சர்வவல்லமையுள்ள கர்த்தருக்கு நன்றி! செலுத்துகிறேன். சகல துதி கன மகிமையும் கர்த்தருக்கே உண்டா வதாக. இந்த புத்தகத்தை எழுதுவதற்கு என்னை வழி நடத்திய எல்லா தேவனுடைய ஊழியர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன். இந்த புத்தகத்தை வெளியிடுவதற்கு ஜெபித்து உதவி செய்த அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

— ராய் வர்கீஸ்

फिलाडेल्फिया फेलोशिप चर्च ऑफ इण्डिया
FILADELFIA FELLOWSHIP CHURCH OF INDIA

முன்னுரை (Introduction)

இந்தப் புத்தகம் தேவனுடைய இருதயத்தைகவருவதாக இருக்கிறது. இந்தப் புத்தகத்தில் ராய் வர்கீஸ் என்பவர் தேவனுடைய அன்பை சுவிஷேசமாக அறிவிப்பதே இவருடைய வாழ்க்கையாக அமைந்தது. இவருடைய செய்தி அநேகம் பேரை கவர்ந்தது. நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்கிறேன். (யோவான் 17:18,20) ராய் அவர்கள் அறிமுகமில்லாத மக்களிடத்தில் தேவனுடைய அன்பை வெளிப்படுத்துவதே அவருடைய ஏக்கமாய் இருந்தது. வட இந்தியாவில் அலைந்துதிரிகிறதான ஆயிரக்கணக்கான மனிதர்களின் குறித்ததான பாரத்தை இவர் மூலமாய் அறிந்துகொள்ளலாம். அவரும் அவருடைய நண்பர்களும், கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் சந்தித்ததான சவால்களை இந்தப் புத்தகத்தில் நீங்கள் பார்க்கமுடியும்.

சுவிஷேசம் என்பது ஒரு குறிப்பிட்ட குழுவுக்கோ அல்லது கைதேர்ந்தநிபுணர்களுக்கோ மாத்திரம் கொடுக்கப்படவில்லை என்று ராய் அவர்கள் அறிந்திருந்தார்கள். இந்தப் புத்தகம் வாசிப்பவர்களுக்கு வரலாற்றில் இருக்கும் மிக முக்கியமான அழைப்பு இந்தப்புத்தகம் விடுக்கிறது. தேவனை பின்பற்றுகிற ஒவ்வொருவரும் இந்தியாவிலும் வேறு இடங்களிலும் தேவனுடைய

தரிசனத்தில் பங்காய் இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய திட்டமும் நோக்கமும் ஆகும். சாட்சி இல்லாமல் கிராமங்களில் சுவிஷேசம் சொல்வது வட இந்தியாவில் கடினமான காரியம். எந்த ஒரு விசுவாசியும் தன்னிடத்தில் இருக்கிறதான ஊழியக்காரனோடு தன்னை இணைத்துக் கொண்டு அங்கு இருக்கிறதான கிராமங்களில் இயேசுவை பிரசிங்கிக்க வேண்டும். ராய் அவர்கள் இந்தப் புத்தகத்தில் "ஏன் இந்தியாவில் சுவிஷேசம் ஆக்கப்படவில்லை" என்கிற செய்தியை தெளிவாக விளக்கியுள்ளார் அவர் தேவனுக்காக வாஞ்சையாக இருப்பதை நினைத்து நான் வியக்கிறேன். அவர் இரட்சகராகிய இயேசுவோடு உள்ள உறவில் அர்பணிக்கப்பட்டதினால் நான் இந்தப் புத்தகத்தை வாசிக்கும்படி உற்சாகப்படுத்துகிறேன்.

Dr. ஜாய் பூனோஸ்

International President,

Native Missionary Movement

The Indian Pentecostal Church of God (Regd.)
(DELHI STATE)
Indigenous, Independent and the largest pentecostal Movement of India
(Registered in 1935 at Eluru, A.P. Under Society Act XXI of 1860 Reg. No. 9/1935-36)
120 - B, Pocket - B, Mayur Vihar Phase - II, Delhi - 110 091 INDIA
Ph. : (011)-22771168, 22772803, E-mail: pastorkjoy@yahoo.com

Why India is not yet evangelized?

Best Wishes

"இந்தியா ஏன் சுவிசேஷமையமாக்கப்படவில்லை?" என்கிற இந்தப் புத்தகம் ராய் வர்கிஸ் என்பவரால் எழுதப்பட்டு, ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து அச்சிடப்பட்டுள்ளது. இந்த தேவனுடைய மனுஷன் இருளில் உள்ளமக்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரவும், அநேக வட இந்திய கிராமங்களில் உள்ள ஆத்துமாக்களை இரட்சிப்பில் வழி நடத்தவும் முயன்றார். இந்தப் பத்தகத்தில் தேவனோடு உள்ள ஐக்கியத்தை மிக ஆழமாக எழுதியுள்ளார். மேலும் இவருடைய வாழ்க்கையில் சுவிஷேசம் மிக முக்கியப்பங்காக இருந்தது மேலும் இந்தப் புத்தகத்தின் மூலம் அநேகம் ஆயிரம் மக்கள் பயனடைவார்கள்.

உலகம் முழுவதும் சுவிஷேசம் என்பது தேவனுடைய கட்டளையாக இருந்தது. ஆனால் பெரும்பாலான இன்றைய சபைகளில் சுவிஷேசத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அநேகம் பேர் ஒன்று அல்லது இரண்டு கூட்டங்கள் நடத்தி திருப்தியாகி விடுகிறார்கள்.

இந்தப் புத்தகத்தில் தேவன் தேவதூதர்களை சுவிஷேசப் பணியை செய்யும்படி அழைக்கவில்லை அப்படி தேவன் தேவதூதர்களுக்கு சுவிஷேசப் பணிக்கு நியமித்திருந்தால் அவர்கள் ஒருநிமிடத்தில் சுவிஷேசத்தை அறிவித்திருப்பார்கள் ஆனால் மக்களுக்கு தங்களுடைய அறிவின் மூலமாக அல்ல அனுபவத்தின் மூலமாக சுவிஷேசம் அறிவிக்கும்படியாய் கட்டளையிட்டிருந்தார்.

இந்தப் புத்தகம் அநேகம் பேருக்கு ஆசீர்வாதமாயிருக்கும் என்று வாழ்த்துகிறேன்.

Rev. k.ஜாய்,
புது டெல்லி

பொருளடக்கம்

1. பிரதான தடைகள்..........9
2. பெரிய எதிர்ப்புகள்..........15
3. மிகவும் முக்கியமான தடை..........17
4. இரட்சிப்பின் உறுதியான விழிப்புணர்வு..........22
5. நற்செய்தி பணியின் பாரம்..........27
6. பல்வேறு வகையான போதனைகள்..........40
7. வேறொரு சுவிசேஷம் என்றால் என்ன?..........45
8. தேவனுடைய எல்லா வேலைகளையும் செய்வது யார்?....50
9. எல்லாரும் யாருக்கு பிரசங்கிப்பது?..........59
10. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்..........65
11. இயேசு தொலைநோக்கு பார்த்த தேவனுடைய ராஜ்யம்.....73

அத்தியாயம் 1

பிரதான எதிர்ப்புகள்

1. பல்வேறு மொழிகள்

இந்தியாவில் பல்வேறு மொழிகள் நிலவியிருப்பது தான் சுவிசேஷமையமாக்கப்படுவதற்கு தடைகளாக உள்ளன. இதன் காரணமாக சுவிசேஷம் பல்வேறு மொழிகளில் சென்று அடையவில்லை. இந்த நூலில் எழுத்துப் படிவமில்லாத பல்வேறு மொழிகள் இந்திய கிராமங்களில் உள்ளன. இந்த மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு ஒருவர் அவர்களில் ஒருவராக மாறி அவர்களுக்கு போதிக்க வேண்டும்.

சுவிசேஷத்தின் முன்னோடிகளான ஹெர்மன் குந்தெர்ட் அயல்நாட்டிலிருந்து வந்த மிஷனெரிகளாய் செயலாற்றப்பட்டது. இதனால் சுவிசேஷம் நமது மொழிகளில் மொழியாக்கம் செய்யப் பட்டது. இதன் பயனாக நமது நாட்டிலும், கல்வி துறையிலும் முன்னேற்றமும் வளர்ச்சியும் ஏற்பட்டது. இதை மறுக்கிறவர்கள் சுவிசேஷத்தை புறக்கணித்த நாடுகளை நமது நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நாம் வரலாற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் இது எளிதான வேலை அல்லவென்று தெளிவாகிறது. முன்னோடி மிஷனெரிகள் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தது போல நாமும் பெரிய விலை கிரயத்தை செலுத்த வேண்டி உள்ளது. இவைகளைப் பார்த்த சில மக்கள் அவர்களை பாராட்டி அவர்களை கொண்டாடி இருக்கிறார்கள். ஒருசிலர் கடினமாக தங்கள் வாழ்வை சுவிசேஷத் திற்கென்று அர்ப்பணித்தார்கள். இந்தியா சுவிசேஷமையமாக்கப் படாமலிருப்பதற்கு இது பெரிய தடையாக உள்ளது.

ஒருவர் இதை செய்ய விரும்பினால் அவரை ஊக்குவிப்ப தற்கும் உதவி செய்வதற்கும் ஒருவருமில்லை. ஆனால் புதிதாக சுவிசேஷ பணியை ஆரம்பித்தவர்களுக்கு எதிராக விஷத்தை பரப்பி செழிப்படையாமலிருக்க செய்கிறார்கள். எனது அனுபவத்தில் ஒன்றை பகிர்ந்து கொள்கிறேன். உத்திரப்பிர தேசத்தில் "சாஹாபாத்" என்ற ஊருக்கு சென்றிருந்தேன். அங்கு சுவிசேஷம் சென்று அடையவில்லை. மக்கள் சுவிசேஷத்தை கேட்பதற்கு ஆவலாயிருந்தாலும், பல நேரங்களில் அங்கு

சூழ்நிலை சாதகமானதால் ஒரு கத்தோலிக்க பள்ளிக்கூடம் துவங்கப்பட்டு அங்கிருந்த குருவானவருடன் சுமித் தொடர்கொண்டு "யெகோவா சாட்சி" மக்களுடன் சேர்ந்து யெகோவாவை ஆராதிக்க துவங்கினார். இப்பொழுது அவர் இயேசுகிறிஸ்து, அல்லது யெகோவா அல்லது வேறு யாரை நேசிப்பது என்று குழப்பமடைந்தார். அவருடைய விசுவாச வாழ்க்கை காற்றில் அலையும் பனைமரத்தில் ஓலை போல தள்ளாடியது.

(Sumith, from Sahabad, Uttar Pradesh)

ஒரு பொதுவான அதிசய நிகழ்ச்சி எல்லா இடங்களிலும் காணப்பட்டது. ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்களைப் போல அநேகர் இருப்பதால் இந்த அழிப்பிற்கு முடிவு கட்டினார்கள். ஒரு சில உண்மையான ஊழியர்கள் மட்டுமே தாங்கள் பரலோகத்தில் செல்வதற்கு உதவுகிறார்கள். "அறுவடையின் எஜமான் தமது வேலையாட்களை அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுங்கள்" என்று கூறியது போல இந்த பிரச்சனைகளுக்கு தேவன் மட்டுமே பரிகாரம் செய்யவேண்டும். (மத்தேயு 9:38).

2. பல்வேறு சீதோஷ்ணநிலைகளின் காலநிலைகள்

சுவிசேஷத்தை பரப்புவதற்கு பல்வேறு சீதோஷ்ண நிலைகளும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. வட இந்தியாவுக்கும், தென் இந்தியாவுக்கும் இடையே பல்வேறு சீதோஷ்ண நிலைகளின் வித்தியாசங்கள் உள்ளன. நான் வடஇந்தியாவிற்கு சென்றபோது இந்த நிலை என்னை தொந்தரவு செய்தபடியால் 2001-ல் எனது வேலையை ராஜினாமா செய்து திரும்பவந்து விட்டேன். தென்னிந்தியாவை விட வட இந்தியாவில் வெப்பம் அதிகமாக உள்ளது. 50 டிகிரி செல்சியஸ் அளவிற்கும் அதிகரிக்கிறது. குளிர்காலத்தில் 0 டிகிரி செல்சியஸ் அளவில் குறைகிறது. குளிரை சமாளிப்பதற்கு வெப்பத்திற்குரிய ஆடைகளை தரித்து பாதுகாத்து கொண்டால்

குளிரை சமாளிக்கலாம். ஆனால் கோடை காலங்களில் மின்சாரம் பல இடங்களில் இல்லாததினால் அநேகர் இதை கடினமாக கருதுகிறார்கள்.

சுற்றுப்புற சூழ்நிலை இருக்கவேண்டும். (நல்ல காற்றோட்டமுள்ள, வசதிகளுடனுள்ள வீடு / கம்பளி போர்வை). இவைகள் இல்லா விட்டால் பரிதாபமான நிலையில் மரிக்க வேண்டியிருக்கும். உள்ளூரில் வாழும் மக்களும் இந்த சீதோஷ்ண நிலைகளால் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு வருடத்தில் இரண்டு மூன்று மாதங்கள் மட்டுமே சீதோஷ்ண நிலை சரியாக இருக்கும். இதனால் தான் தேவனுடைய ஊழியம் இங்கு விரிவடையவில்லை. ஆகவே இம்மானுவேல் அருட்பணி இயக்கம் உள்ளூர் மிஷனரிகளை ஊழியத்திற்கென்று தெரிந்தெடுக்கிறது.

3. பல்வேறு உணவு பழக்கங்கள்

பல்வேறு உணவு பழக்கங்கள் கூட இந்தியா சுவிசேஷ மையமாக்கப்படுவதை பாதிக்கின்றன. வட இந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்குமிடையே பல்வேறு உணவு பழக்கங்கள் உள்ளன. வட இந்தியாவில் சப்பாத்தியும் குறைந்த அளவில் அரிசியும் சாப்பிடுகிறார்கள். உருளைக்கிழங்கும் வெங்காயம் தவிர்க்க முடியாத உணவுகள். மக்கள் ஏழையாயிருந்தாலும் இதைப் பொதுவாக சாப்பிடுகிறார்கள். வெறும் வெங்காயத்தை சிறு துண்டுகளாக நறுக்கி சாப்பிடுகிறார்கள். வடஇந்தியாவுக்கு முதல் முறையாக செல்பவர்கள் இந்த இரண்டு வட்டாரங்களில் கஷ்டப்படுகிறார்கள்.

இவைகள் என்னுடைய தனிப்பட்ட அனுபவங்களும் வட இந்தியாவிற்கு முதலில் வருகிறவர்களுக்கும் அனுபவங்களாக உள்ளன. ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும் காலப்போக்கில் அதை ரசித்து சாப்பிடுவீர்கள். ஆகவே ஒருவர் வட இந்தியாவில் நீண்ட நாட்களாக தங்கி இருக்கவேண்டும். ஆனால் தரமான உணவை சாப்பிடுவதற்கு கடினமாகவே இருக்கும்.

எனது ஆரம்பகால ஊழியத்தில் கேரளாவிலிருந்து அநேகர் வந்து உத்திரபிரதேசத்தில் பல பகுதிகளை சந்தித்து உணவுகளை தங்களுக்கு சரிவர உண்ண முடியாமல் தவித்தனர். சுகாதாரமாக இல்லாதபடியால் அநேக இடங்களில் அவர்கள் சாப்பிடவில்லை. தேவனுடைய கிருபையினால் மட்டுமே ஒருவர் தேவனுடைய ஊழியத்தை செய்யமுடியுமென்று பின்னர் உணர்ந்தேன். ஒருமுறை உத்தராஞ்சல் என்ற ஊருக்கு "குட்டு" என்ற மிஷனரியுடன் ஊழியத்துக்கு சென்றேன். நாங்கள் தங்கியிருந்த வீட்டினருகே பன்றிகளை வளர்க்கும் பண்ணை இருந்தபடியால் துர்நாற்றத்தை எங்களால் தாங்கமுடியவில்லை. வீட்டில் மின்சாரம் இல்லாததினால் இரவு உணவு வெளியே பரிமாறினார்கள். துர்நாற்றம் எங்களுக்கு அதிக தொந்தரவு அளித்தது. எந்த தொந்தரவும் அளித்தாலும் உணவை நான் வழக்கமாக சாப்பிடுகிறவன். உணவை எனது கழுத்து அருகே வைத்துக்கொண்டு. மற்றொரு கையினால் எனது வாயில் உணவை வாந்தி எடுக்காமல் வைத்திருப்பேன்.

வட இந்தியாவில் தேவனுடைய வார்த்தையை கேட்கிறவர்கள் ஏழையாயும் சுத்தமில்லாமலிருந்தாலும் மிகவும் பாசமுள்ளவர்களும் உபசரிக்கிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டில் சாப்பிடுவது அவர்களுக்கு மகிழ்ச்சியாகும். மன விருப்பத்தின் தயக்கமில்லாமல் உணவு சாப்பிடுகிறவர்களை அவர்கள் விரும்புகிறார்கள். ஒரு முறை மிஷனரி குடும்பத்தினர் வட இந்தியா ஊழியத்தை சந்தித்து விட்டு உள்ளூர் மக்கள் தயாரித்த உணவை விரும்பாததினால் மகிழ்ச்சி இல்லாமல் ஊருக்கு சென்றார்கள். வட இந்தியா சுவிசேஷ மையமாக்கப் படாமலிருப்பதற்கு இது ஒரு காரணம். ஆகவே மக்கள் கொடுக்கும் உணவை புசிக்கும் மிஷனரிகளுக்காக நாம் ஜெபிக்க வேண்டும்.

பெரும்பான்மையான வட இந்தியர்கள் மிருகங்களை நேசிப்பவர்களும் அசைவ உணவை வெறுக்கிறார்கள். தென்னிந்தியா மற்றும் கேரளாவில் உள்ளவர்கள் மீன் மற்றும் இறைச்சி சாப்பிடாமலிருப்பதை கற்பனை செய்துகூட பார்க்க மாட்டார்கள். சுவிசேஷத்தினிமித்தம் இறைச்சி உணவை புறக் கணிக்கும் மக்கள் தான் வட இந்திய ஊழியத்திற்கு தேவைப்

படுகிறார்கள். இந்த இடங்களில் ஊழியம் செய்வதற்கு நமது உணவு பழக்கங்கள் சுவிசேஷ மையமாக்கப்படாமலிருப்பதற்கு காரணமாகும். சுவிசேஷத்திற்கு எதிராளியிருப்பவர்கள் "இறைச்சி புசிப்பவர்களுக்கு" எப்பொழுதும் ஒப்பனையாயிருக்கிறார்கள். நமக்கு முன் வைக்கப்பட்டிருப்பதை புசிப்பதற்கு நாம் அனுமதிக்கப்படுகிறோம். ஆனால் பவுல் கூறுவது போல போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால் நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காத படிக்கு என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்

4. வட இந்தியாவில் எழுத்தறிவு பெரிய பிரச்சனையாக உள்ளது. அநேகர் இன்றும் எழுதவும் படிக்கவும் தெரியாமலிருக்கிறார் கள். பள்ளி மாணவர்களின் அவலநிலை பரிதாபமாக இருக்கிறது. இந்த இடங்களில் வேதாகமத்தை விநியோகம் செய்தால் பயனில்லை. நன்றாக வேதவசனத்தை பிரசங்கித்து போதிக்கிறவர்கள் நமக்கு தேவை, வட இந்தியாவில் அநேக மிஷனரி நிறுவனங்கள் ஆங்கில வழி கல்வி பள்ளிக்கூடங்களை நடத்தி வருகிறார்கள். ஆனால் மக்களுக்கு முதலில் எழுத்தறிவை அளிப்பதில் கவனம் செலுத்தவேண்டும். பிள்ளைகள் குடும்பத்தின் வேளாண்மை விவசாய தொழில்களில் செயல்படுவதால் பள்ளிகளுக்கு செல்வதில்லை. எல்லா வேலைகளை செய்து பெற்றோர்களுக்கு உதவி செய்ய விரும்புகிறார்கள்.

5. போக்குவரத்து சாலை குறைபாடுகள்

போக்குவரத்து சாலை வழிகள் குறைவாக இருப்பதால் பல்வேறு இடங்களை சந்திக்க முடிவதில்லை. அநேக கிராமங்களில் பல்வேறு கிலோமீட்டர்கள் கால்நடையாகவே நடந்து செல்கிறோம். பொதுவாக மக்கள் சிரமப்படமாட்டார்கள். சுவிசேஷம் பட்டணங்களிலும் நகரங்களிலும் சென்றதே தவிர கிராமங்களுக்கு செல்லவில்லை என்பதற்கு காரணமாக உள்ளது. அநேக கிராமங்களுக்கு செல்வதற்கு மாட்டு வண்டிகள், எருமை வண்டிகள் மற்றும் கழுதைகளால் இழுத்துச் செல்லும் வண்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன. உள்ளூர் மக்களுக்கு கடினமாயில்லாவிட்டாலும் வெளிப்புற மக்களுக்கு கடினமாகும்.

6.சரியான வீடுகளும் வசதிகளும் இல்லை

சரியான வீடுகளும், கழிவறை வசதிகளும் இல்லாத படியால் அநேக மிஷனரிகள் சென்று ஊழியம் செய்ய மறுக்கிறார்கள். கர்த்தர் என்னை முதலில் "சிசோனா" என்ற கிராமத்திற்கு வழி நடத்தினார். உத்திரபிரதேசத்திலுள்ள இந்த கிராமத்திற்குள் இதுவரை சுவிசேஷம் பிரவேசிக்கவில்லை. இந்த கிராமத்திலுள்ள ஒருவர் வேலை செய்வதற்கு சண்டிகர் செல்ல வேண்டும். இவர் கர்த்தரைப் பற்றி கேள்விப்பட்டு, நோய்வுற்று பின்னர் குணமடைந்தார். விக்கிரக ஆராதனையை விட்டு இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். இயேசுவை குறித்து கேள்விப்படாத அவர்களுடைய கிராமத்திற்கு ஒரு திருமணத்திற்கு சென்றிருந்தேன். போக்குவரத்து வசதி இல்லாத போதிலும் கடினத்துடன் அங்கு சென்று அடைந்தேன். நான் இடுக்கி மாவட்டத்திலிருந்து வந்தபடியால் பல்வேறு வசதிகள் குறைவாக இருந்தபோதிலும் ஒரு சில நாட்கள் அங்கு தங்கி இருந்தேன். திருமணத்தின் கடைசி நாளில் அவர்களுடைய உறவினர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டேன். மக்கள் கேட்பதற்கு ஆவலாயிருந்தபடியால் ஒவ்வொரு மாதமும் அங்கு சென்றேன். இந்த ஊரில் தங்கி ஊழியம் செய்ய ஒரு மிஷனரியை தேடினேன். வசதி குறைவினால் ஒருவரும் கிடைக்கவில்லை. இதற்காக ஜெபியுங்கள்.

அத்தியாயம் 2

1.பெரிய எதிர்ப்புகள்

வேதாகமத்தின் வரலாற்றை படிக்கும்போது சுவிசேஷத்துக்கு எதிர்ப்புகள் ஆரம்பத்திலிருந்தே காணப்பட்டது. புனித தோமையான இரத்தசாட்சி மரணம் இதற்கு உதாரணமாக உள்ளது. ஆனால் "கார்வாபாசி" போன்ற நிகழ்வுகள் இதற்கு பல்வேறு ஆதாரங்களை இன்றைய நாட்களில் அதிகரித் திருக்கிறது. "அக்கினியில் போடப்பட்டது ஒருபோதும் சூரிய வெளிச்சத்தில் எரிந்து போகாது" என்று பழமொழி கூறுவது போல, ரோம பேரரசின் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்திய திருச்சபை கர்த்தரால் கட்டப்பட்டது. எந்த வல்லமைகளும் அதை மேற்கொள்வதில்லை. ஆனால் நாம் விசுவாசத்தில் உறுதியாக இருக்கவேண்டும். ஆனால் பிசாசு யாரை விழுங்கலாமென்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல வகை தேடி திரிகிறான். என்பதில் சந்தேகமில்லை. ஆனால் உபவாசத்திலும் ஜெபத்திலுமிருப்பவர் களுக்கு கவலையில்லை. ஏனெனில் "உலகத்திலிருப்பவனிலும் உங்களுக்குள்ளிருப்பவர் பெரியவர்" (1 யோவான் 4:4)

2. பழக்கவழக்கங்களும் பாரம்பரியங்களும்

கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிரான பல்வேறு பழக்கங் களும் பாரம்பரியங்களும் வட இந்தியாவில் உள்ளன. "ஹோலி" பண்டிகை. கிறிஸ்வ விசுவாசத்திற்கு எதிரானது. மக்கள் பாரம்பரியங்களில் கண்மூடித்தனமாக அடிமைப்பட்டிருக்கிறார்கள். நம்புகிறார்கள். ஒவ்வொரு ஆண்டு இப்படி செய்வது நமக்கு வித்தியாசமாக இருக்கிறது. "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (எபிரேயர் 10:38).

3. வித்தியாசமான பழக்கவழக்கங்களும், பாரம்பரியங்களும்

வட இந்தியாவின் பல்வேறு பழக்கங்களும் பாரம்பரியங் களும் நல்லவைகளாக தோன்றினாலும் அவைகள் நமது தேசம் சுவிசேஷமையமாக்கப்படுவதற்கு தடைகளாக உள்ளன. உதாரணமாக பெரும்பாலான கிராமங்களில் பெற்றோர்களும், மூப்பர்களும் கடவுளைப்போல மரியாதை செலுத்தப்பட்டு, சிறு பிள்ளையிலிருந்தே அவர்களுடைய தொட்டு வணங்கும் பழக்கம் இருந்து வருகிறது. மூப்பர்கள் சொல்வதற்கு மக்கள் கீழ்படிகிறார் கள். அப்படிப்பட்ட இடங்களில் மூப்பர்கள் சுவிசேஷத்தில் ஆர்வம் காண்பிக்காவிட்டால் மக்கள் சுவிசேஷத்தை கேளாமற்போவதால் அது ஒரு பெரிய தடையாக மாறுகிறது. இந்த கிராமங்களில்

ஊழியம் செய்யும் மிஷனரிகள் அடிக்கடி அடிக்கப்பட்டு அவர்களுடைய பழக்கங்களையும் பாரம்பரியங்களையும் கடைபிடிக்காதபடியால் சிறையில் அடைக்கப்பட்டனர்

சட்டீஸ்கரிலுள்ள பல்லோத் கிராமத்தின் வயதான பெற்றோர்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் புறக்கணிக்கப்பட்டனர். சுவிசேஷ மையமாக்குவதற்கு எதிராக அவர்கள் கூறுவது, மிஷனரிகள் அவர்களுடைய பழக்கங்களுக்கும், பாரம்பரியங்களுக்கும் எதிராக செயல்பட்டு, "வெளிநாட்டு மதங்களை தங்கள் மத்தியில் பரப்புகிறார்கள்" என்று கூறுகிறார்கள். இவ்வாறு அவர்கள் சுவிசேஷகர் மற்றும் நற்செய்திக்கும் எதிரிகளாயிருக்கிறார்கள். மிஷனரிகளுக்கு வீட்டை வாடகைக்கு விடுகிறவர்கள் மற்றும் உணவு அளித்து உதவுகிறவர்களை கிராமத்திலிருந்து வெளியே தள்ளிவிடுகிறார்கள். மூப்பர்கள் புகைபிடித்தும், குடிபோதையிலிருக்கும்போது அவர்கள் மத்தியில் சுவிசேஷத்தை அறிவிப்பது கடினமாகும். இந்த ஊர்களில் தேவனுடைய வார்த்தையை அறிவிப்பதும், இயேசுவை ஏற்றுக்கொள்வதும், சுவிசேஷப்பணியும் ஒருபோதும் செழிப்படையவில்லை. மேற்கூறிய தடைகள் தேவனுடைய வல்லமையால் மட்டுமே நீக்க முடியும். மனிதனால் முடியாது. வட இந்தியாவில் ஊழியம் செய்யும் ஆயிரக்கணக்கான மிஷனரிகள் கூட இது தேவனால் மட்டுமே முடியும் என்று கூறுகிறார்கள். கொடூரமான பார்வோனின் பிடிகளிலிருந்து மக்களை மீட்டெடுத்த கர்த்தர் இன்றும் உயிரோடிருக்கிறார். (எபிரேயர் 13:8). "கர்த்தர் நமக்கு அந்த தேசத்தை கொடுப்பார்" என்று தைரியமாக சொல்லக்கூடிய யோசுவா மற்றும் காலேபை போன்ற மிஷனரிகள் நமக்கு தேவை.

(Our aim to reach the unreached villages of north India)

★★★ ★★★

அத்தியாயம் 3

மிகவும் முக்கியமான தடை

கிறிஸ்தவ அர்ப்பணிப்பின் குறைவு

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களின் அர்ப்பணிப்பு குறைவு தான் இந்தியா சுவிசேஷ மையமாக்கப்பட்டதின் மிகப் பெரிய தடையாக உள்ளது. இந்த தடையை நாம் தனிநபராக தான் அகற்றமுடியும். இந்த தடையை நாம் அகற்றினால் இந்தியா சுவிசேஷ மையமாக்கப்படுவதின் தடையை விரைவாக அகற்றுவார். இந்திய தேசத்தின் தந்தை என்று போற்றப்படும் மஹாத்மா காந்தி அர்ப்பணிப்பை குறித்து "கிறிஸ்தவர்கள் வேதாகமத்திலுள்ள கிறிஸ்துவின் உபதேசங்களின் வாழ்ந்தால் தான் முழு இந்தியாவே கிறிஸ்தவர்களாக மாறியிருக்கும்" என்றார்.

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் பிரபலமானவர்கள் அல்ல, ஆனால் அவர்களுக்குள் அர்ப்பணிப்பு இருந்தது. பிரபலயமானபோது அர்ப்பணிப்பு காணாமற்போனது. கேரளாவில் ஆலப்புழை என்ற ஊரிலிருந்து படகு மூலம் கொச்சி நகருக்கு பொருட்களை ஏற்றி வியாபாரம் செய்தார்கள். எடை போடாமலேயே மக்கள் பொருள்களுக்கு விலை கொடுத்தார்கள். இன்றை கிறிஸ்தவர்களை இப்படி நம்புவார்களா? அநேக கிறிஸ்தவர்கள் வெளிநாட்டுக்காரர்களிடமிருந்து பெரிய பணத்தொகையை எதிர்பார்க்கிறார்கள். இவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்கு வெட்கமாயிருக்கிறார்கள்.

ஒரு சிறிய வீட்டை விற்று அந்த பணத்தில் வேறொரு வீட்டைக் கட்டினோம். இதற்காக வங்கியிலிருந்து கடன் வாங்கினோம். இந்த கட்டிட வேலையை குறைந்த செலவில் செய்வதற்கு உரிமையை ஒரு இந்து விசுவாசிக்கு கொடுத்தோம். கிறிஸ்தவ விசுவாசத்தில் உண்மையாயிருப்பவருக்கு கொடுத்தோம். இவர் "அல்லேலூயா" என்று பாடுகிறவர். கட்டிடம் கட்டி முடித்த பிறகு தான் ஏற்பட்ட தவறை கண்டுபிடித்தோம். பத்து வருடங்களானாலும் விரிசில் ஏற்படாது என்று கூறினாலும் ஒரே வருடத்தில் விரிசல் ஏற்பட்டது. மேலும் அதற்கு ஐந்து லட்சம் ரூபாய்கள் செலவழித்தோம். எல்லாம் முடிந்து விட்டது.

என்று கூறுவதில் எந்த பயனுமில்லை. பணத்தை இழந்த பிறகுதான் மனம் வருந்தி முட்டாள் தனத்தை உணர்ந்தோம். ஆனால் எங்கள் கட்டிடப்பணி முடிந்த பிறகு, அவர்கள் வேறொரு ஊழியருக்கு கட்டுமான வேலை செய்ய துவங்கினார்கள். அந்த கட்டிடம் முடிக்க முடியாமல் காவல்துறை வழக்கு நடைபெற்றது. இதே மக்கள் வேறொரு இந்து சகோதரருடன் சேர்ந்து கட்டிடப் பணியை துவங்கினார்கள். அவர்களிடமிருந்து மேலும் அதிக பட்டசமான பணத்தை எதிர்பார்த்தார்கள். அதற்காக அந்த மனிதன் "நான் தற்கொலை செய்து விடுவேன்" என்று மிரட்டினார். இவைகள் நிமித்தம் அவர்கள் கட்டிடப்பணியை விட்டு இன்று பலர் வியாபாரமாக செய்வதுபோல "தேவனுடைய ஊழிய வேலையை" செய்ய துவங்குகிறார்கள்.

இன்று அநேக விசுவாசிகள் தேவனுடைய ஊழியக்காரர் களும் உண்மையான அர்ப்பணிப்பும் விசுவாசமில்லாமல் தங்களுக்கு வசதியாக தோன்றுவதுபோல வாழ்கிறார்கள். இவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். நான் வட இந்தியாவில் ஊழியத்தை ஆரம்பித்தபோது சுவிசேஷ ஊழியத்தில் உண்மையான ஆர்வமுள்ள ஒரு கல்லூரி பேராசிரியர் இவர்கள் எல்லாரும் தவறானவர்கள் என்று கூறினார். அன்றிரவு நான் கர்த்தரிடம் "ஆண்டவரே நான் தவறான ஊழியனாக இருக்கக்கூடாதென்றும். வேறு வேலை செய்து கொண்டு உமக்கு ஊழியம் செய்கிறேன்" என்றேன். மிகவும் வசதியான நபரின் மகனாக இருந்தபடியால் நான் மிகவும் வேதனைப்பட்டேன். அவர் தனது வாழ்வில் ஏழ்மையின் விளிம்பில் வந்தாலும் எங்களுக்கு சொந்தமல்லாத பொருட்களை தொடுவதற்கு கூட எங்களை அனுமதிக்கமாட்டார்.

அன்று தேவன் என்னிடம் ஒரு கேள்வி கேட்டார், "ஒரு ஊழியனாக நீயே இவ்வளவு உணரும்போது நான் எவ்வளவு அதிகமாய் உணருவேன்" என்றார். உடனே நான் ஏசாயா 1:2-5 வசனங்களை நினைத்துப்பார்த்தேன். இங்கு தேவன் தமது பிள்ளைகள் மற்றும் வானத்தை குறித்து புலம்புகிறார். பிறகு அந்த வலியை ஒப்பிட்டு பார்த்தால் எனது வலியும் தாழ்வுகளும் ஒன்றுமில்லை. "இடறல்கள் வருவது அவசியம். ஆனால் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ அவனுக்கு ஐயோ" (மத்தேயு 18:7) என்ற வசனத்தை நினைவு கூர்ந்தேன்.

உடனே கர்த்தருக்கு முழு இருதயத்தோடு ஊழியம் செய்வேன் என்று தீர்மானித்தேன். நாம் முழு உலகத்தையும் நல்லதாக மாற்ற முயலுவதற்கு பதிலாக நாம் தனிப்பட்ட முறையில் உண்மையும், உத்தமுமாயிருப்பதை தேவன் மகிழ்ச்சி அடைகிறார். ஆகவே அர்ப்பணிப்புடன் கர்த்தருக்கு முன்பாக நிற்கலாம்.

வட இந்தியாவில் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்போது ஆங்கிலேயர்களுக்கு அர்ப்பணிப்பு இல்லையென்று பிடித்தவர்கள் முதலில் கூறுவார்கள். பட்டணங்களில் அவர்கள் ஏற்படுத்தியவை களை பார்த்தால் வெறுமையே என்று நினைக்கலாம். அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதில் பயனில்லை. வாழ்ந்தால் சாது சுந்தர்சிங்கின் வாழ்க்கையை போல வாழ வேண்டும். அன்பினால் சகோதர, சகோதரிகளாக உணரப்பட வேண்டும். ஆனால் வருந்தக்கூடிய காரியம் என்னவெனில் அநேகர் உண்மையில்லாமலிருப்பதே கர்த்தருடைய ஊழியம் தடைபட்டு காணப்படுகிறது.

பரலோக ராஜ்யம் பூமியில் வருவதாக என்று எப்பொழுதும் ஜெபிக்கிறோம். ஆனால் நாமே அதற்கு எதிராக நிற்கிறோம். "இவ்வளவு பெரிய இரட்சிப்பை குறித்து கவலையற்று இருப்போம ானால் எப்படி தப்பித்துக் கொள்வோம்" என்று பவுல் கூறுகிறார். உலகத்தின் நீதிமன்றத்திற்கு நாம் தப்பித்து விடலாம். ஆனால் பரலோகத்தின் நியாயத்தீர்ப்புக்கு தப்பமுடியாது

"ஆனால் அறுவடை காலம் வருவதற்கு முன்பு இரண்டும் ஒருமித்து வருகின்றன" என்று இயேசு கூறினார். ஆகவே பெருமைபடாமல் தாழ்மையாக இருப்போம்.

விசுவாசிகள் அர்ப்பணிப்பு இல்லாமலிருப்பதை விட தேவனுடைய ஊழியர்கள் அர்ப்பணிப்பு இல்லாமலிருப்பது மிகவும் பயமுறுத்தலாக உள்ளது. தேவன் கண்ணின் மணியை போல தமது ஊழியர்களை பாதுகாக்கிறார். "கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது, உன் கண் தெளிவாயிருந்தால் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும்" (மத்தேயு 6:22).

ஆவியில் ஊழியம் செய்கிறவர்களை தேவன் ஒருபோதும் விட்டு விலகுவதில்லை என்று காணலாம். ஆனால் கிறிஸ்துவின் சரீரத்திற்கு நம்மில் எத்தனை பேர் வெளிச்சமாயிருக்கிறோம்?.

அநேகர் மிக பிரகாசமான வெளிச்சத்தோடு ஆரம்பித்து இருளில் முடிவடைகிறார்கள். ஆகவே உங்களுக்குள் இருளாக இருந்தால் அப்பொழுது இருள் எவ்வளவு பெரிதாக இருக்கும். இருளை வெளிச்சமாக மாற்றுவதைப்பற்றி இயேசு காரணத்தைக் கூறினார். ஒருவனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஒருவனை பகைத்து ஒருவனை நேசிக்கவேண்டியதா யிருக்கும். ஆகவே தேவனுக்கும் உலகத்துக்கும் ஊழியம் செய்ய முடியாது. இதனால்தான் அநேகர் மற்றவர்களைவிட வித்தியாச மாக இருக்க விரும்புகிறார்கள். ஆனால் பெயரும் புகழும் அதிகரிக்கும் போது தங்களை மாற்றிக்கொள்கிறார்கள்.

கேரளாவிலுள்ள திருவல்லா என்ற ஊரிலுள்ள பாஸ்டர் ஜோப் வர்கீஸ் எனது நலனை விரும்புகிறவர். அவரிடம் நான் பேசியபோது தேவன் சகோதரர் ராய் அவர்களை குறுகிய மூன்று மாதங்களில் அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார். மேலும் ஆசீர்வதிப்பார். பிறகு நீங்கள் மாறிவிடுவீர்கள் என்றார். இதன் காரணத்தை கேட்கும்போது, நான் 18 ஆண்டுகளாக ஊழியக் காரனாக இருக்கிறேன். பல்வேறு ஊழியர்கள் என்னிடம் வருகிறார்கள். ஆரம்பத்தில் எளிமையானவர்கள். ஆனால் ஆசீர் வதிக்கப்பட்டபோது பிறகு தங்களை மாற்றிக் கொள்கிறார்கள். அவர் கடந்த கூட்டத்தைப் பற்றி நினைப்பூட்டினார். என்னை மாற்றிக்கொள்ள வேண்டுமென்பதை குறித்து பயனடைந்தேன். இதனால் மட்டுமே இம்மானுவேல் மிஷன் அணியினரால் நிறுவப்பட்ட திருச்சபைகளையும் மக்களையும் நம்பினேன். ஏனெனில் பணமும் வசதியும் பெருகும்போது மக்கள் மாறி விடுகிறார்கள். நீதிமொழிகள் 30:8, "நான் பரிபூரணம் அடைகிற தினால் மறுதலித்து கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னை போஷித்தருளும்" என்று கூறுகிறது. மேலும் பவுல் "பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை

இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளி னாலே தங்களை உருவக்குத்திக் கொள்ளுகிறார்கள்". (1தீமோ 6:10). ஆகவே சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு தடைகள் ஏற்படாமல் பவுலை போல நன்றாக ஓடி முடிக்க வேண்டும்.

★★★ ★★★

அத்தியாயம் 4

நித்திய இரட்சிப்பை குறித்த விழிப்புணர்வு

நித்திய இரட்சிப்பை குறித்த விழிப்புணர்வு இல்லாததி னாலே கிறிஸ்தவ அர்ப்பணிப்பை அநேகர் இழந்துவிடுகிறார்கள். "இந்த மண்ணிற்காக விலையேறப்பெற்ற பொன்னை நான் இழக்கமாட்டேன்" என்ற பாடலை நாம் பாடுகிறோம். ஆனால் பாடும்போது அதன் உண்மையான அர்த்தத்தை நாம் புரிந்து கொள்வதில்லை. "எழுதியிருக்கிறபடி தேவன் நம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷ னுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (I கொரி 2:9). இந்த வசனத்தை பலமுறை நாம் பிரசங்கித்திருக்கிறோம். ஆனால் இதன் மதிப்பை நாம் அறியாமலிருப்பதே வருத்தமாகும்.

நித்திய இரட்சிப்புக்காக நமது முற்பிதாக்கள் உலகத்தின் ஆதாயங்களை புறக்கணித்தார்கள். நான் கிறிஸ்துவையும் உயிர்த்தெழுதலின் வல்லமையையும் பாடுகளின் ஐக்கியத்தையும் அறிய விரும்புகிறேன். (பிலிப் 3:10), "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகள் எல்லாம் கூட கொடுக்கப்படும்". இதுவே நமது வாழ்வின் சக்தியாக இருக்க வேண்டும்.

நானும் மனைவியும் ஊழியம் செய்தபோது வருமானத்தை விட செலவு அதிகமாய் இருந்தது. எங்களுக்கு பிள்ளைகள் பிறக்காது என்று மருத்துவர்கள் கூறினார்கள். இதற்காக நாங்கள் ஒரு பிள்ளையை தத்தெடுக்க விரும்பினோம். இதற்கு பணம் இல்லாமல் ஏமாற்றத்தில் தவித்து, வாழ்வை முடித்து இயேசுவோடு நெருங்கி செல்ல விரும்பினோம்.

உதய சூரியனாகிய இயேசுவுடன் நெருங்கி வாழ்ந்தபோது வாழ்வின் தரித்திரம், இருள், ஏமாற்றங்கள் மாறியது. மக்கள் எங்களுக்கு பிள்ளைகள் பிறக்காது என்று கூறியபோது சர்வ வல்லமையுள்ளவர் இரண்டு பிள்ளைகளாய் எங்களை ஆசீர் வதித்தார். குழந்தைகள் சிறப்பு மருத்துவர் எனது மகன் பிழைக்க மாட்டான் என்றும் மனநிலையில் பாதிக்கப்பட்டிருப்பான் என்று கூறிய போதிலும் கர்த்தர் அவனை உயிரோடு எழுப்பினார்.

இன்று எனது நண்பர்களை விட தேவன் எங்களை அபிஷேகித்து எங்கள் தலையை எண்ணெயினால் அபிஷேகித்திருக்கிறார். எங்களுக்காக ஜெபிக்குமாறு எந்த ஊழியரிடமும் நாங்கள் செல்லவில்லை. தேவனுடைய வார்த்தைகளின் மூலம் தேவனிடம் நெருங்கும்போது நமது உள்ளிந்திரியங்களை அறிந்திருக்கும் தேவன் நாம் கேட்பதற்கு முன்பாகவே நம்மை ஆசீர்வதிப்பார்.

With my wife and two children on the Christmas day

உலகத்தின் வசதிக்காக மட்டும் தேவனிடம் நெருங்கி சென்றால் இயேசுவை அறியாதவர்களை விட மோசமான நிலையிலிருப்போரும் "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரை பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்". (I கொரி 15:19).

இயேசு தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் விலைக்கு வாங்கி நித்திய இரட்சிப்புக்காக நம்மை தகுதிபடுத்தினார்

ஆகவே நாம் இருளில் இருப்பவர்களைப்போல இந்த உலகத்தில் நாம் வாழக்கூடாது. மற்றவர்கள் கிறிஸ்துவிடம் வருமளவில் உலகத்திற்கு வெளிச்சமாக வாழவேண்டும். (மத்தேயு 5:14). இதற்காகவே தேவன் நம்மை இருளுள்ள இடங்களில் வைத்திருக்கிறார். ஆகவே நாம் "ஆம்" என்றும் "இல்லை" என்றும் தெளிவாக கூறவேண்டும்.

இப்படிப்பட்ட ஊழியர்களையும் விசுவாசிகளையும் கண்டறிவது கடினமாகும். ஏனெனில் சாத்தான் பொய்களை மக்களின் இருதயத்தில் வைத்திருக்கிறான். வட இந்தியாவில் பல்வேறு ஊழியர்களையும் விசுவாசிகளையும் நான் சந்தித்து வருகிறேன். ஆனால் "ஆம்" என்றும் "இல்லை" என்றும் உண்மையை ஒருசிலர் தான் கூறுகிறார்கள். அநேகர் தங்களுடைய கடன்களையும், கஷ்டங்களையும் மக்களிடம் கூறுகிறார்கள். தேவன் அளித்த ஆசீர்வாதங்களை மறைத்து வைக்க வேண்டுமென்று எனக்கு புரியவில்லை. ஒரு முறை பொய் சொல்லத்துவங்கினால் சத்தியத்தை கூறுவது கடினமாகும். ஏனெனில் பொய்கள் சாத்தானின் தந்திரங்களாகும். ஒருவரையும் நம்பமுடியாத உலகத்தில் நாம் வாழ்கிறோம். "தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" (2 தீமோ 3:5). இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய வார்த்தையை விட்டு விலகி மற்றவர்களையும் இடறலடைய செய்கிறார்கள்.

தேவனுடைய கரங்களில் நம்மை முற்றிலும் அர்ப்பணித்து நமது கிரியைகளும் கனிகளும் தேவனை பிரியப்படுத்த வேண்டும். அப்பொழுது சந்தோஷம், சமாதானம், சாந்தம், உண்மை போன்றவைகளால் நிரப்பப்படுவோம். (கலா 5:22). இப்படி மாறுவதற்கு இயேசுவைப்போல, "சித்தமிருந்தால் வழி பிறக்கும்" என்று ஜெபிக்கவேண்டும். நமது முதியோர்களின் வாழ்க்கை நித்திய இரட்சிப்பை பெற்றது உண்மையானால் நாமும் உண்மையாக பிரயாசப்படவேண்டும். "ஆகையால் மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு விசுவாசத்தை முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்

கர்த்தராகிய இயேசு சீக்கிரம் வருகிறார். இதற்காக பரிசுத்த ஆவியானவரை உலகத்திற்கு அனுப்பியிருக்கிறார். இயேசுவை முழு இருதயத்தோடு தேடுகிறவர்கள் மீது தேவன் தமது ஆவியானவரை ஊற்றுகிறார் (அப் 2:17). இதை குறித்து அநேகர் அறியாமலிருப்பது வருத்தப்படக்கூடியது.

பவுலின் சீஷர்கள் எபேசுவில் இதைப்பற்றி அறியாமலிருந்தார்கள் (அப் 19:2). அநேக கிறிஸ்தவர்களின் வாழ்வில் மதுபானம், புகை பிடித்தல் மற்றும் தீயபழக்கங்களோடு வாழ்கிறார்கள். இதனால் தான் மக்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளாமலிருக்கிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவரை பெற்றவர்களின் வாழ்க்கை அனுதினமும் புதுப்பிக்கப்படுகிறது.

ஆகவே நமக்கு இலவசமாக அளிக்கப்பட்ட நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வது நமது கடமையாகும். "அன்றியும் ஒருதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபிரேயர் 9:27). மரணம் மனிதனுக்கு உண்மையென்றால் நியாயத்தீர்ப்பும் உண்மை யாகும். மரணத்திற்கு முன்பாக முழங்கால்களை முடிக்காதவர் இயேசு ஒருவரே என்பதை குறித்து நான் ஆச்சரியப்படுகிறேன். இவ்வளவு பெரிய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாதவர்கள் நியாயத் தீர்ப்பு நாளின் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

அந்த நாளின் அசல் மற்றும் போலித்தனமானது எது என்றும் அறிவார்கள். சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாத பெரியோரும், சிறியோரும் கூக்குரலிடுவதை ஒருபோதும் கேட்டிராத அளவில் கேட்போம்.

கர்த்தருக்கு நண்பனை போலிருந்த மோசேயை கூட தேவன் விட்டு வைக்கவில்லை. நம்மையும் மன்னிப்பாரென்று எதிர்பார்க்காதீர்கள். "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம். பிசாசுகளை துரத்தினோம் அல்லவா? அற்புதங் களை செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்கு சொல்லுவேன்" (மத்தேயு 7:22-23). அறியாதவனாயிருந்து அடிகளுக்கு ஏதுவானவைகளை செய்தவனோ சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும் (லூக்கா 12:48). இது தேவனுடைய கொள்கையானதால் ஊழியர் களும் விசுவாசிகளும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

இதை வாசிக்கிற அனைவரும் நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டியதில்லை. ஆகவே இரண்டாம் வருகை வரைக்கும் சுவிசேஷத்தை நாம் அறிவிக்கவேண்டும். இதற்கு தேவன் நமக்கு பெலனை அறிந்து உதவி செய்வாராக!.

★★★ ★★★

அத்தியாயம் 5

சுவிசேஷத்திற்குரிய பாரம்

நித்திய இரட்சிப்பை குறித்து விழிப்புணர்வுள்ளவர்கள் இழந்து போன ஆத்துமாவை குறித்து பாரமுள்ளவராயிருப்பார்கள். உயிர்த்தெழுதலுக்கு பிறகு பரலோகத்திற்கு செல்லு முன்பு இயேசு பெரிய கட்டளை அளித்தார். "உலகத்தின் முடிவுபரியந்தம் சீஷராக்குங்கள்" என்றார். இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்பவர்கள் கடைசியாக முக்கியமான வார்த்தைகளை கூறுவார்கள். இயேசு இதை முக்கிய கட்டளையாக அளித்தார். இந்த கட்டளையை தேவதூதர்களுக்கு அளித்தாரென்று நான் பல முறை நினைத்திருக்கிறேன். இயேசு பிறந்தபோது அதை அறிவிக்கும் பொறுப்பு தூதர்களுக்கு பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் அளிக்கப்பட்டிருந்தது. தேவனால் அனுப்பப்பட்ட தூதன் எதிரிகளை முறியடித்தான். (2நாளா 32:21). இது தேவ தூதர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டிருந்தால் ஒரு சில நொடிகளில் சுவிசேஷத்தை எங்கும் அறிவித்திருப்பார்கள்.

பூமிக்கும் வானத்துக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ அவ்வளவு வித்தியாசம் நமது எண்ணங்களுக்கும் கர்த்தருடைய வழிகளுக்கிடையே உள்ளது. "உனக்கும் ஸ்திரீயின் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் அவர் உன் தலையை நசுக்குவார்" (ஆதி 3:15). இதனால்தான் தேவகுமாரன் ஸ்திரீயினிடத்தில் பிறந்து பிசாசின் தலையை நசுக்கினார். ஸ்திரீயினிடம் பிறந்த தமது பிள்ளைகள் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். இதனால்தான் மனிதகுமாரர்கள் இரட்சிப்பின் சுவி சேஷத்தை அறிவிக்கும் பொறுப்பை அளித்துள்ளார். தேவ தூதர்கள் நம்மை கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நல்ல போராட்டத்தை போராடி நித்திய கிரீடத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

பவுல், "தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசுகிறிஸ்து என் சுவிசேஷத்தின்படியே மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவரென்று நினைத்துக்கொள்" (2 தீமோ 2:8). ஆரம்ப நிலையிலுள்ள திருச்சபைகளுக்குறியதென்று நமது மூப்பர்கள் "இயேசு" மட்டும் என்று நினைத்திருந்தார்கள். ஆனால் இன்று சுவிசேஷம் அனைவருக்குமுறியதென்று நாம் நினைக்கவில்லையா? சுவிசேஷம் என்பது திருச்சபைகள், பரிசுத்தவான்கள், தேவ ஊழியக்காரர்களுக்குரியது. சுவிசேஷம் தங்களுடைய சுயநலத் திற்காக பயன்படுத்தப்படுகிறதினால் ஒருவரும் இரட்சிக்கப்படுவ தில்லை. சுவிசேஷம் அனைவருக்கும் இரட்சிப்பை அளிக்கிறது. ஆகவே தான் பேதுரு "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழேயெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை" என்றான் (அப் 4:12).

இயேசுவின் நாமத்தில் தான் உலகமெங்கிலும் அற்புதங் களும், அடையாளங்களும் நடைபெறுகின்றன. ஆனால் உலக ஆதாயத்திற்காக இயேசுவின் நாமத்தை பயன்படுத்தக்கூடாது. வேதத்தில் சாத்தான் கூட பெரிய அடையாளங்களை செய்கிறான். "பார்வோன் சாஸ்திரிகளையும், சூனியக்காரரையும் அழைப்பித் தான். எகிப்தின் மந்திரவாதிகளும் தங்களின் மந்திரவித்தை யினால் அப்படி செய்தார்கள். அவர்கள் தங்கள் கோல்களை போட்டபோது அவைகள் சர்ப்பங்களாயின (யாத் 7:10-13).

புதிய ஏற்பாட்டில் பவுல் சுவிசேஷத்தை பிரசங்கித்தபோது பெரிய காரியங்கள் நடந்தன. "நாங்கள் ஜெபம் பண்ணுகிற இடத்துக்கு போகையில் குறி சொல்ல ஏவுகிற ஆவியை கொண்டிருந்து, குறி சொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர் பட்டாள். அவள் பவுலையும், எங்களையும் பின் தொடர்ந்து வந்து, இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர். இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள்". (அப் 16:16-18). இதை போன்ற அற்புதங்களை இன்றும் உலகத்தில் காணலாம்.

பிசாசு ஏன் இந்த அற்புதங்களை செய்கிறான்? ஏனெனில் மனிதர்களை நித்திய இரட்சிப்பிலிருந்து திசைதிருப்பி விடுகிறான். அவனுடைய முடிவு வருகிறது. நமக்கு முன்பாக ஒளியின் தூதனாக செயல்படுகிறான்.

அநேக சபைகளும் பிள்ளைகளும் இதை புரிந்து கொள்வதில்லை. அற்புதங்கள் மூலம் உதவி செய்யாமல் மக்களை கொல்லவும் அழிக்கவுமே வருகிறான். (யோவான் 10:10). இதன் பலன்களை அறிந்தும் மக்கள் அவனுக்கு இரையாகி விடுகிறார்கள். இந்த கண்ணியில் ஒருமுறை விழுந்துவிட்டால் அதிலிருந்து தப்பித்து வருவது கடினமாகும்.

முக்கியமான காரியம் என்னவெனில் சாத்தானின் அற்புதங்களை கண்டு வருகிறவர்களைவிட அவிசுவாசிகள் விசுவாசத்திற்குள் வருகிறார்கள். பிசாசுக்கு ஊழியராகிவிட்டால் தேவனோடுள்ள எல்லா உறவுகளும் துண்டிக்கப்படுகின்றன. சில நேரங்களில் அவர்கள் தேவனுடைய நாமத்தை கூப்பிடுகின்றனர். இயேசுவின் நாமத்தில் உபவாசித்து ஜெபிக்கலாம். ஆனால் வெளிச்சமும், இருளும் ஒன்று சேராததுபோல தேவன் அவர்களோடு தொடர்பு வைப்பதில்லை. மனிதனின் இருதயத்தில் தேவனும் சாத்தானும் ஒருமித்து குடியிருக்கமுடியாது. தேவனுக்காக தங்களை முற்றிலும் அர்ப்பணித்தவர்களுக்குள் மட்டுமே தங்கியிருக்க முடியும்.

இதன் அடிப்படையில் சில காரியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கேரளாவிலுள்ள மூவாற்று புழையில் B.sc நான் படித்துக்கொண்டிருந்தபோது கம்யூனிச கட்சியை ஆதரித்து SFI யில் உறுப்பினராக இருந்தேன். மாணி கூட்டணியிலுள்ள திரு.ஜோஸ் அவர்களுக்கு ஓட்டு போட்டதை நினைவூட்டுகிறேன். அவருக்கு எதிரான கட்சிக்கு நான் வேலை செய்தேன். நான் பெயர் கிறிஸ்தவராயிருந்த போதிலும் கர்த்தருடைய கிருபை என் மேலிருந்தது. இதனால் தான் என்னை நன்றாக அறியாத முஸ்லீம் குடும்பத்தினர் தங்கள் வீட்டில் உறுப்பினராக தங்க வைத்து உணவு அளித்தனர். கிராம புறங்களிலுள்ள பலாப்பழம் மற்றும் மிட்டாய்களால் எனது வயிற்றை நிரப்பினேன். எத்தா மாமியினால் அளிக்கப்பட்ட உணவினால் எனது பசி திருப்தியானது.

குடும்ப தலைவர் (இக்கா) மற்றும் ஐந்து பிள்ளைகள் அனைவரும் என்னை போஷித்தார்கள். 'எத்தாவை' எனது தாய் போல நேசித்தேன்.

பிரச்சனைக்குள் நடத்தியது. படிக்கவேண்டிய நான் தூக்கம் வருவதற்குள் தள்ளப்பட்டேன். அறிவியல் மாணவனாகிய எனக்கு தூக்கம் பெரிய கரிசனையாக இருந்தது. தூக்கம் வராமலிருப்ப தற்கு காலை குளிர்ந்த தண்ணீரில் நனைத்து பீடிகளை புகைத்தேன். ஆனாலும் தூக்கம் வராது.

நல்ல உணவும் பிரச்சனையில்லாத வாழ்வும் இருந்தால் ஒருவர் நன்றாக உறங்கலாம் என்பதை நான் அறியவில்லை. அந்த நாட்களில் மூவாற்றுபுழையிலுள்ள ஒரு மந்திர சக்தியுள்ள பெண்ணிடம் ஒரு இந்து பெண்ணினால் வழி நடத்தப்பட்டேன். அவளுடைய கண்டுபிடிப்பிற்கு கஷ்டப்படவில்லை. அந்த பெண் என் தலை மீது கை வைத்து சுழற்றி. ஒரு மணியை கையில் வைத்து கொண்டு ஒலி எழுப்பி. இரண்டு பில்லிசூனியங்கள் எனக்கு எதிராக நிற்கிறது. இதனால் தூங்க முடியாமல் எழும்பி நடக்கிறாய் என்று தீர்க்கதரிசனமாக சொன்னாள்.

சிறிதளவு விபூதியை அளித்து தினந்தோறும் பூஜை செய்யுமாறு கூறினாள். கேரளாவிலுள்ள குருவாயூர் கோயில், ஸ்ரீ பத்மநாபா கோயிலுக்கும் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கோயில்களுக்கும் சென்றேன். சில நாட்களுக்கு பிறகு எனக்கு சமாதானம் இல்லாமல் எதுவும் கல்லூரி படிப்பை முடிக்க இயல வில்லை. வேலை இல்லாமல் நாயை போல தெருக்களில் அலைந்தேன்.

நான் NCC யில் இருந்தபடியால் நல்ல விளையாட்டு வீரனாக வருவேனென்று எதிர்பார்த்தார்கள். இவர்களுக்கு முன்பாக வேலை இல்லாமல் அவமானப்பட்டேன். எனது வாழ்க்கையை முடித்து விடலாமென்று நினைத்தபோது கெட்டகுமாரனைப் போல தேவன் என்னைத் தொட்டார்.

இந்த புத்தகத்தை படிப்பவர்களுக்கு இதை தெளிவாக சொல்கிறேன். பிரச்சனைகள் எதுவானாலும் சரி சாத்தானின் தந்திரங்கள் பின்னால் செல்லாதீர்கள். உறுதியாக தீர்மானித்து இயேசுகிறிஸ்துவை நம்பினால் அவர் சமாதானம் தருவார். ஐசுவரியனாகிய மனிதன் நித்திய நரக அக்கினியிலிருந்து கூக்குரலிட்டு அழுததுபோல யாரேனும் பிரச்சனைகளில் சிக்கி தவித்தால் இயேசுவை நோக்கி கூப்பிடுங்கள். அவர் உங்களை இரட்சிப்பார் (லூக்கா 16:24).

ஒரு கதை கேள்விப்பட்டிருக்கிறேன். இறந்துபோன ஒரு காட்டு எருமையின் உடல் நயாகரா நீர் வீழ்ச்சியில் விழப்போகும் நிலையில் அந்த உடலை ஒரு கழுகு சாப்பிட்டுக் கொண்டிருந்தது. மரித்த உடலின் மீதிருந்து பறந்து செல்ல பல்வேறு வாய்ப்புகள் கிடைத்தது. நீர் வீழ்ச்சியிலிருந்து எனது உறுதியான சிறகுகளால் அடையும்போது பறந்து செல்வேன் என்று நினைத்தது. ஆனால் மரித்த எருமையின் உடல் அருகே நின்று கொண்டிருந்தது. அதன் நகங்கள் மரித்த உடலின் மாம்சத்துக்குள் ஆழமாய் இறங்கிவிட்டன. நீர்வீழ்ச்சியை நெருங்கியபோது மரித்த உடலை விட்டு விலகிச்செல்ல நினைத்தது. ஆனால் பறக்கமுடியாமல் காட்டு எருமையின் மரித்த உடலுடன் கழுகும் மற்றொரு பிணமானது. சாத்தானோடு கூட இப்படித்தான் நடக்கும் அவனிடம் அதிகமாய் நெருங்கும்போது அவனை விட்டு விலகிச் செல்ல முடியாமற்போய் விடும். ஆகவே அவனை விட்டு விலகி இயேசு கிறிஸ்துவோடு இணையுங்கள்.

இதை எனது அனுபவங்களிலிருந்தும் கூறுகிறேன். சிறிய ஜெபத்தினாலோ, மற்ற ஊழியர்களுடைய ஜெபத்தினாலோ உங்கள் தலைமேல் கைவைத்து ஜெபிப்பதினால் இது நடக்காது. இயேசுவோடு பிரிக்கமுடியாத அளவில் இணைந்திருப்பதினால் மட்டுமே இந்த விடுதலை கிடைக்கும். பாவத்தில் பிறந்தவர்கள் மீது சாத்தான் தனது வல்லமையை பயன்படுத்துகிறான். ஆசீர்வாதங்களும், அற்புதங்களும் அவன் மேலிருந்து நூறு சதவீதம் வரலாம். இதனால் தான் இந்த அடிமைத்தனத்திலிருந்து நசரேயனாகிய இயேசுவினால் மட்டுமே விடுதலையாக்க முடியும். ஆகவே இயேசுவை நோக்கி கூப்பிடுங்கள்.

நமது எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டிருந்தாலும், குற்ற உணர்வுகளிருப்பதால் அதன் பலன்களை அனுபவித்தாக வேண்டும். ஆகவே தாவீது "நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ் செய்யாதிருங்கள்" (சங்கீதம் 4:4). தேவனுடைய வார்த்தைக்கு எதிரான பாவங்களிலிருந்து நாம் நடுங்கி விலகி யிருக்கவேண்டும். தாவீது பாவம் செய்தபோது உடனே ஒன்றும் நடக்கவில்லை. ஆனால் தேவன் தீர்க்கதரிசி மூலம் உன் வீட்டில் பொல்லாப்பை உன்மேல் தேவன் அவனுடைய எல்லா பாவ......... பெரிய அழிவு அவனுடைய வீட்டை தாக்கியது. இதை வாசிப்பவர்கள் தாம் செய்த பாவங்களை குறித்து விழிப்புணர்வு அடைந்து அதன் பலன்களை அடைவோம் என்று உணர்ந்து விலகியிருக்கவேண்டும். நாம் பாவங்களை செய்திருந்தால் தேவனிடம் மன்னிப்பு கேட்டு தண்டனைகளை பெற்று தேவனுடைய நேரத்திற்காக காத்திருக்கவேண்டும். தாவீது தேவனுக்கு பிரியமானவராயிருந்த போதிலும் பாவம் செய்தபோது ராஜா என்ற பதவியை இழந்தான். தாவீதை திரும்பவும் அதிகாரத்துக்கு கொண்டு வந்ததுபோல உங்களையும் நிலைவரப் படுத்துவார்.

தாவீது பழைய ஏற்பாட்டு ஊழியக்காரன், நாமோ கிருபையின் யுகத்தில் வாழ்கிறோம் என்று அநேகர் ஒப்புக் கொள்வதில்லை. ஆனாலும் தேவன் கிருபையில் ஐசுவரிமுள்ள வர். கெட்டகுமாரனை தகப்பன் மன்னித்ததுபோல தேவன் அவர் களுடைய பாவங்களை மன்னித்து விடுவாரென்று நினைக்கிறார் கள். உலகத்திலுள்ள கர்த்தரை அறியாத மக்கள் அந்த மனிதனை போல பெரிய ஆசீர்வாதங்களை பெறுகிறார்கள்.

ஆனால் பல வருடங்களாக தேவனை அறிந்தவர்கள் ஒன்றும் அறியாதவர்களை போலவும், கர்த்தரிடமிருந்து எதைப் பெறுவோ மென்றும் வாழ்கிறார்கள். உண்மை என்னவெனில் காலப்போக்கில் தேவனிடமிருந்து ஒருசில அடிகளை மட்டும் பெறுகிறார்கள். இதை அறிந்த இயேசு, "எவனிடத்தில் அதிகம் கொடுக்கப் பட்டதோ அவனிடத்திலிருந்து அதிகம் கேட்கப்படும்" என்றார். (லூக் 12:48).

தேவனுக்கு முதிர்வயதாகி அவர் பழைய ஏற்பாட்டிலிருந்து போல கோபப்படுவதில்லை. அவர் ஈசாக்கை போல பகுதி பார்வையுள்ளவரை போல தனது பிள்ளைகளை, ஆசீர்வதிக்கிறார் என்று நினைக்கிறோம். ஆனால் தேவனுடைய வார்த்தைகளை கவனித்தால், தேவன் என்றும் மாறவில்லை. அவர் மாறாதவர், அவரே ஆரம்பமும் முடிவுமாயிருக்கிறார். இதை எழுதுகிறவரும், வாசிக்கிறவர்களும் மாறலாம். ஆனால் தேவன் மாறாதவர். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.

வானத்தையும், பூமியையும் படைத்தவரை நாம் ஏமாற்ற முடியாது. " நீ இவைகளை செய்யும்போது நான் மவுனமாயிருந்தேன். உன்னைபோல நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய்" (சங்கீதம் 50:21). நாம் என்ன செய்தாலும் தேவன் அப்படியே அநேகர் நினைக்கிறார்கள்.

ஆனால் "தேவன், நேசிக்கிறவர்களே இதை சிந்தித்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் நான் உங்களை மீறிபோடுவேன், ஒருவரும் உங்களை விடுவிப்பதில்லை". (சங்கீதம் 50:22). ஆகவே நீங்கள் பிரகாசிக்க வேண்டுமெனில் இப்படிப்பட்ட வைகளை விட்டு விலகியிருங்கள்.

மிகவும் பின்தங்கிய சூழ்நிலையிலிருந்து வந்த ஊழியக்காரனை நான் அறிவேன். ஆனால் அவர் வளர்ச்சி அடைந்த போது அவர் மாற்றம் அடைந்தது ஆச்சரியமாயிருந்தது. பொது மக்கள் அவரை சந்திக்க முடியாது. இவரை முன் அனுமதியின்றி யாரும் சந்திக்க முடியாது. தேவன் சில காலம் பார்த்துக் கொண்டிருந்தார். ஒருநாள் அவளுடைய மகளுடைய இரண்டு கண்களும் பார்வை இழந்தன. அப்பொழுதும் கூட அவர் மாறவில்லை. அபிஷேகம் பெற்ற அநேக ஊழியர்கள் ஜெபித்த போதிலும் கூட தேவன் பதிலளிக்கவில்லை. இன்று வரைக்கும்

[illegible] கொள்ளவேண்டும்.

[illegible] ஊழியர்கள் மூலம் அல்லது
[illegible] நடக்கிறதா? என்று பலர் கேட்கிறார்கள்.
[illegible] குறைவாக அளிக்கப்படுகிறதே
[illegible] நாடுகிறார்கள். தேவனும் சாத்தானும்
[illegible] கிரியை செய்ய விரும்புகிறார்கள்.
[illegible] சொல்கிறோம் ஐயோ ஒருவருடைய
[illegible] பிரவேசிப்பதில்லை. ஒருவர்
[illegible] அவர் பிரவேசிக்கிறார். "அவர் வந்தால்
[illegible] தட்டுகிறார்" (வெளி 3:20). ஆனால்
[illegible] வருவான். அவனை துரத்தி
[illegible] பொல்லாத ஏழு ஆவிகளுடன்
[illegible] ஆகவே ஊழியர்களும் விசுவாசிகளும்
[illegible] தாங்கியிருக்குமாறு ஜெபிக்க
[illegible] என்று கூறுவது கடினம். ஆகவே
[illegible] இயேசுவோடு பயணம்
[illegible] இறுதிவரை உறுதியாக கிடைக்கும்
[illegible] அற்புதங்கள், அடையாளங்கள்
[illegible] பவுலைப்போல "உண்ணவும்
[illegible] உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்க
[illegible]" [illegible].

[illegible] ஊழியர்களுக்கும் பொருத்தமா
[illegible] "அன்றன்றுள்ள அப்பத்திற்காக
[illegible]" (மத்தேயு 6:11). உலக
[illegible] உலக பிரகாரமான ஐசுவரியங்
[illegible] நமது ஆவிக்குரிய வாழ்வு
[illegible] பெருகும். ஆனால் நாம்
[illegible] என்று புரியும்.

சாத்தானின் சதியா என்று கூறுவது கடினம். ஆகவே யாரையும் நியாயந்தீர்க்காமல் இயேசுவோடு பயணம் செய்யும்போது பெரிய பலனை இறுதிவரை உறுதியாக கிடைக்கும் வரை காத்திருப்போம். எனவே அற்புதங்கள், அடையாளங்கள் நாம் ஓட வேண்டியதில்லை. பவுலைப்போல "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்க கடவோம்" (I தீமோ 6:8).

இது விசுவாசிகளுக்கும் ஊழியர்களுக்கும் பொருத்தமாயிருக்கும். ஆகவே தான் "அன்றன்றுள்ள அப்பத்திற்காக ஜெபிக்குமாறு கர்த்தர் கற்பித்தார்" (மத்தேயு 6:11). உலக பிரகாரமாக சிந்திப்போமானால், உலக பிரகாரமான ஐசுவரியங்களும், ஆதாயங்களும் பெருகினால் நமது ஆவிக்குரிய வாழ்வு முன்னேறும். கர்த்தரின் ஊழியமும் பெருகும். ஆனால் நாம் சுற்றிலும் பார்த்தால் இது தவறு என்று புரியும்.

நமது முற்பிதாக்கள் வெள்ளியும் பொன்னோடும் வாழ்ந்தது இல்லை. ஆனால் இயேசுவின் நாமத்தில் மட்டுமே வாழ்ந்தனர். (அப் 3:6). அவர்களுடைய ஊழியம் மனித ஞானத்தைத்தாண்டி சென்றது. வலுவான தொடர்புகளும் போக்குவரத்து வசதிகள் இல்லாமலிருந்த போதிலும் தேவனுடைய வார்த்தை "காட்டுத்தீ" போல பரவியது. நீரோ மன்னன் போன்றவர்கள் தேவனுடைய வார்த்தையை நெருக்க முயற்சித்தார்களென்று வரலாறு கூறுகிறது. ஆனால் அவர்கள் அனைவரும் தோல்வி அடைந்தார்கள். பல நூற்றாண்டுகளுக்கு பிறகு கான்ஸ்டன்டைன் போன்ற தளபதிகள் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொண்டனர். வெள்ளியும் பொன்னும் பெருகிய போது தேவனுடைய வார்த்தை குறுகியது. அநேகர் பாவத்திலிருந்து அடையாளமாக பணத்தை செலவழித்து விடுதலை பெற்றார்கள்.

தேவனுடைய வேலையை செய்வதற்கு நமக்கு பணம் தேவை இல்லை. நமக்கு தேவனுடைய அதிகாரத்தின் திறவுகோல் தேவை என்று அறிந்து கொள்கிறோம். கர்த்தரை நம்பும்போது அதற்குள் திறவுகோல் உள்ளது. நாம் விசுவாசத்துடன் இந்த திறவுகோலை பயன்படுத்தினால் பரலோகத்தில் மிகுந்த பலன் இருக்கும் (மத்தேயு 18:18). மற்ற காரியங்களுடன் இதை செய்தால் பாதாளத்தின் வாசல்கள் நம்மை மேற்கொள்ளும்.

பேதுருவுக்கு மட்டுமே திறவுகோல்கள் கொடுக்கப்பட்டன. பேதுருவின் சீஷர்கள் மட்டுமே பரலோகத்தில் பிரவேசிப்பார்கள் என்று நினைக்கிறார்கள். இயேசுவை விட பேதுருவுக்கு முக்கியத் துவம் அளிப்பவர்கள் மத்தேயு 16:18-19, 18:18 வசனங்களை படிக்க வேண்டும். அப்பொழுது திறவுகோல் அனைவருக்கும் அளிக்கப்பட்டதென்று புரியும்.

"நீ பேதுருவாயிருக்கிறாய் இந்த கல்லின் மேல் என் சபையை கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற் கொள்வதில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்கு தருவேன். பூலோகத்திலே நீ கட்டுவது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும் (மத்தேயு 16:18-19).

வருத்தமான பகுதி என்னவெனில் பணமும், புகழும் பெருகும் போது போலித்தனமாக திறவுகோல் இல்லாத இந்த திறவுகோல்களை அநேகர் இழந்து விடுவார்கள். இதனால் தான் அநேகர் அற்புதங்களைக் குறித்தும் கடந்தகால அபிஷேகத்தை குறித்தும் பேசுகிறார்களே தவிர "புதிதாக பிடித்த மீன்களைப் பற்றி" பேசுவதில்லை. அர்ப்பணிப்பில்லாமல் கர்த்தரை பின் பற்றுவது எவ்வளவு பரிதாபம். ஆகவே திறவுகோலை இழந்து விடாமல் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுமாறு ஊக்குவிக் கிறேன். இயேசுவிடமிருந்து போலித்தனமல்லாத சாவியை நீங்கள் பெற்றிராவிட்டால் கர்த்தர் விரைவில் மேகத்தில் வருவதற்கு முன்பு அவைகளை பெற்றுக்கொள்வோம்.

உண்மையாக ஊழியம் செய்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். ஏனெனில் அவர் உண்மையுள்ளவர். அதைப் போல அவர் ஜாதி வேற்றுமையின்றி அனைவரையும் ஏற்றுக் கொள்கிறவர் (அப் 10:34). இதை அறிய வேண்டுமெனில் நமது நாட்டிலுள்ள பல்வேறு ஊழியர்களின் அனுபவங்களை படித்து பார்க்கவேண்டும். ஒரு பிரபலமான ஊழியர் தனது நிறுவனத்தை விட்டு சென்றவரை குறித்து கூறினார், அவர்கள் தனியாக ஊழியம் செய்து, ஆசீர்வதிக்கப்பட்டு, சைக்கிளில் சென்றவர்கள் இன்று கார்களில் செல்கிறார்கள். நமது சபையிலும் உள்ளவர்கள் அனைவரும் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்பது எங்கள் விருப்பம்.

உயரமோ, பலத்தையோ பார்ப்பதில்லை. ஆனால் நமது இருதயத்தை மட்டுமே பார்க்கிறார். இதனால்தான் அநேகர் ஆசீர்வதிக்கப்படாமல் ஒருசிலர் மட்டுமே ஆசீர்வதிக்கப்படு கிறார்கள்.

நாம் வேலைக்காக ஒரு நேர்முகத்தேர்வுக்கு சென்றால் அவர்கள் நூற்றுக்கணக்கான கேள்விகளை கேட்கிறார்கள். ஆனால் இயேசு "மற்றவர்களை விட நீ என்னை அதிகமாய் நேசிக்கிறாயா?" என்று ஒரு கேள்வி தான் கேட்கிறார் (யோ 21:15). இதற்கு ஆம் என்று எத்தனை பேரால் சந்தேகமில்லாமல் பதில் அளிக்கமுடியும். பல்வேறு சபைகளுக்கு சென்றபிறகு தேவனை விட மக்கள் ஐசுவரியத்திற்கு தான் அதிக முக்கியத்துவம் அளிக்கிறாரென்று அறிந்தேன். இதில் பாரம்பரிய சபைகளுக்கும் மற்ற சபைகளுக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

யாக்கோபு கூறிய முக்கியமான சத்தியத்திற்கு அநேகர் முக்கியத்துவம் அளிப்பதில்லை. "ஏனெனில் பொன் மோதிரமும், மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருக்கிற ஒரு மனுஷனும் கந்தையான வஸ்திரம் ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது, மினுக்குள்ள வஸ்திரம் தரித்திருக்கிறவனை பார்த்து நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும் தரித்திரனை பார்த்து நீ அங்கே நில்லு அல்லது நீ இங்கே என் பாதபடியண்டை யிலே உட்காரு என்றும் சொன்னால் உங்களுக்குள்ளே போதகம் பண்ணி தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர் களல்லவா?" (யாக் 2:1-4).

இயேசு கூறும்போது "ஐசுவரியான் தேவனுடைய ராஜ்யத்துக்குள் நுழைவதை காட்டிலும் ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிதாயிருக்கும்" என்றார் (லூக்கா 18:25). ஐசுவரிய வான்களுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிப்பவர்கள் இயேசுவும் உபதேசமும் உண்மை இல்லை என்ற செய்தியை உலகத்திற்கு அனுப்புகிறார்கள். வெளியே உள்ளவர்கள் முட்டாள்கள் என்று நினைத்துவிடக்கூடாது. வெள்ளையர்களை பார்க்கும் போது எப்படி பொருத்தமானது என்பதை மறுக்கிறீர்கள். இப்படித்தான் பணக்காரர்களை பார்க்கும்போது அநேகர் நடந்து கொள்கிறார் கள். இதை வாசிப்பவர்களின் வாழ்க்கை ஒரு ஜீவனுள்ள வேதா கமமாயிருக்கட்டும். இந்தியா இன்னும் சுவிசேஷமையமாக்கப் படவில்லையெனில் உங்களைப் போன்றவர்களே அதற்குக் காரணமாகும்.

இயேசு மற்றும் சீஷர்கள் வாழ்ந்த காலத்தில் அநேகர் ஐசுவரிய வான்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்தார்கள். ஆனால் வேதாகமத்தில் அவர்களை விட மற்றவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததாக ஆதாரம் இல்லை. இந்த அடிச் சுவடுகளை நாம் பின்பற்றவேண்டும். இன்றும் ஐசுவரியவான்கள் ஊழியத்தில் இருக்கிறார்கள். அவர்களை மற்றவர்களைப் போல கருதுங்கள். இல்லாவிட்டால் இயேசுவின் சீஷர்களாக கருதப்பட மாட்டோம். "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறோம்" (ரோமர் 12:5).

தமிழ்நாட்டில் ஒரு பணக்காரனை எனக்கு தெரியும். அவர் சபைகளுக்கு தாராளமாய் கொடுக்கிறவர். சுவிசேஷக்கூட்டங் களுக்கு பொருளுதவி செய்கிறார். தனது சொத்தின் அதிக பட்சத்தை கர்த்தருடைய ஊழியத்திற்காக கொடுக்கிறார். தனது பெருமையினால் தனது பிள்ளைகள் மற்றும் அயலகத்தாரோடும் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதற்கிடையில் அநேக ஊழியர்கள் அவருடைய வீட்டில் தங்கினார்கள். பரலோகத்திற்கு சொந்தமான நாம் நமது அழைப்பை தரக்குறைவாக கருதி "ஒரு வேளை போஜனத்துக்காக தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப் போட்ட ஏசாவைப் போல சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (எபிரேயர் 12:16).

நான் வடஇந்திய மிஷனரி பணித்தளத்தை சந்தித்தபோது விசுவாசிகளாகி ஊழியம் செய்யும் மக்களை சந்தித்திருக்கிறேன். கர்த்தருடைய ஊழியத்திற்காக ஏன் ஒப்புக்கொடுத்தீர்கள் என்று கேட்டபோது, பெரும்பாலானோர் அர்ப்பணிப்பில்லாமல் பணத்திற்காக வந்ததை உணர்ந்தேன். ஒரு கிராமத்திலிருந்து வாலிபரை வேதாகம கல்லூரிக்கு அனுப்பினால் ஏராளமான பணம் அளிப்பதாக வாக்களித்திருப்பது ஒரு காரணமாகும். இப்படிப்பட்டவர்கள் சாட்சி இல்லாமலும், ஆத்தும பார மில்லாமலும் இருக்கிறார்கள். "தேவ பக்தியை ஆதாயத் தொழிலாக எண்ணுகிறார்கள்" (I தீமோ 6:5)

உத்திரப்பிரதேசம், போஜ்பூரா போன்ற இடங்களில் மிஷனரி நடத்தியபோது கிச்சா என்ற மிஷனரி என்ன

செய்யப்போவதாகவும், பண உதவி செய்யவும் கேட்டார். நான் அதை பொறுப்புடன் எடுத்துக்கொள்ளவில்லை. அவர் தொடர்ந்து வலியுறுத்ததால் அவருடைய இடத்தை சந்தித்தேன். அவர் இந்து பின்னணியிலிருந்து வந்தவர் என்றும் அவர் படித்த வேதாகம கல்லூரி ரூ.10,000 கொடுப்பதாக வாக்களித்திருந்தார்கள். ஆதலால் தான் அவர் ஊழியத்தை ஆரம்பித்தார். ஆத்தும பாரத்தினால் அவர் வளரவில்லை. ஊழியத்திலிருந்தால் பணம் கிடைக்கும் என்று எண்ணினார். இப்படிப்பட்ட மிஷனரிகளை வட இந்தியாவில் காணலாம்.

இப்படிப்பட்ட கனவுகளை வாக்களித்த வேதாகம கல்லூரிகள் இதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும். "தனக்குண்டான வற்றை இழக்காதவன் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான்" என்று இயேசு கூறினார் (லூக் 14:33). இயேசு அளிக்காத வாக்குகளை நீங்கள் ஏன் அளிக்கவேண்டும்? இந்த வட்டாரங்களில் மாற்றம் ஏற்படவேண்டும், இல்லாவிட்டால் இப்படிப்பட்ட வேதாகம கல்லூரிகளால் இந்தியாவை சுவிசேஷ மையமாக்க முடியாது. பிரச்சனை என்னவெனில், போதுமான மிஷனரிகள் தங்களை முற்றிலும் அர்ப்பணிக்கவில்லை. ஆகவே அனைவரும் இவர்களுக்காக ஜெபிப்போம்.

★★★ ★★★

அத்தியாயம் 6

பலவகையான உபதேசங்கள்

பல்வேறு உபதேசங்களும், கள்ள போதனைகளும் இருப்பதாக வேதாகமத்தில் ஆதாரங்கள் உள்ளன. இதை விசு வாசிகளும் நன்றாக அறிந்திருக்கிறார்கள். பல்வேறு திருச்சபை களை நிறுவிய பவுல் "உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவை பிரசங்கத்தானானால் அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் பெற்றீர் களானால் நன்றாய் சகித்திருப்பீர்களே" (2 கொரி 11:4) என்றார். இது அன்றும் இன்றும் விசுவாசிகளுடைய விசுவாசத்தைக் கெடுக்கும் பிரச்சனையாக உள்ளது. உண்மையில் இது சாத்தானின் கிரியையாகும். அவன் இயேசுவின் மகிமைன்ய திருச்சபைகளில் இதனால் கெடுக்கிறான்.

இந்துமதம் மற்றும் இஸ்லாம் போன்ற மதங்களில் இது பொதுவான பிரச்சனையாக மட்டுமிருப்பதில்லை. சீனர்கள் போலித்தனமான பொருட்களை உலக சந்தையில் விற்பது போல சாத்தானும் போலித்தனமான "இயேசுவை" உலகத்தில் பல்வேறு பகுதிகளில் விற்பனை செய்கிறான். அசலுக்கும் போலித்தனத்திற் குமிடையே உள்ள வித்தியாசம் என்னவெனில் தரத்திலும் விலையிலும் ஏராளமான மாற்றங்கள் உள்ளன. இதற்கு எனது அனுபவத்தை கூறுகிறேன். எனது மனைவி ரூ.25,000/- மதிப்புள்ள சாம்சங் தொலைபேசியை வாங்கினார். அதில் இணைய தளம், வாட்ஸ்அப். கேமரா, முதலிய வசதிகள் உள்ளன. ஆகவே இதைப்போல நானும் வாங்க வேண்டுமென்று நினைத்தேன். பணம் இல்லாததினால் ரூ.3000/- மதிப்புள்ள தொலை பேசியை வாங்கினேன். அநேக கிறிஸ்தவர்களும் இது போலிருக்கிறார்கள். பெயரளவில் கிறிஸ்தவர்களே தவிர உண்மையான கிறிஸ்தவ வாழ்வை அனுபவிப்பதில்லை. கிறிஸ்தவர்கள் வெளிநாட்டுக்காரர்கள் என்ற பெயர் சொல்லப் படுவதால் அநேகர் பயத்தில் வாழ்கிறார்கள். பவுல் கூறியது போல இயேசுவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் உண்மையாக வாழ்வோம்.

உண்மையான இயேசுகிறிஸ்துவை கண்டறிவது எப்படி? நாம் பிரபல்யமான பாடலை கிறிஸ்தவ வாழ்வு ஆசீர்வாதங்களால் நிறைந்திருக்கிறதென்று பாடுகிறோம். இதன் உண்மையான

வாழ்வை அனுபவிக்க வேண்டும். ஆகவே தான் "கர்த்தருடன் சந்தோஷமாயிருக்கிறேன்" என்று பாடகன் பாடுகிறான். மக்கள் இதை அறியமாட்டார்கள். ஏனெனில் "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்" (2 கொரி 5:7).

நாம் சீயோனுக்கு பிரயாணம் செய்யும்போது புயல்கள் வீசலாம். நமது வாழ்க்கை படகில் நமது இரட்சகர் புயலையும், கடலையும் அடக்குகிறவர், நம்மோடிருக்கிறார். நாம் இயேசுவுடன் நன்றாக பயணம் செய்யாமலிருப்பது தான் பிரச்சனை, மரியாள் மற்றும் யோசேப்பை போல மக்கள் தங்களுடன் இயேசு இல்லாமல் பயணம் செய்கிறார்கள்.

இயேசுவோடு பயணம் செய்ய வேண்டுமென்றால் வலுவான விலைக்கிரயம் செலுத்தவேண்டும். தங்களால் முடிந்த வரைக்கும் இடத்தை வாங்குகிறார்கள். போலித்தனமான வைகளை வாங்குகிறவர்களை விட அசல் பொருட்களை வாங்கு கிறவர்கள் அதிகமாயிருக்கிறார்கள். சாத்தானின் வியாபாரம் அனு தினமும் அதிகரிக்கிறது. மனிதர்களால் உருவாக்கப்பட்ட இயேசுவை மக்களுடைய திறமைக்கேற்றாற்போல போலித் தனத்தை சாத்தான் விற்பனை செய்வதால் அசல்தனம் திருச்சபை களில் குறைந்து போகிறது. இதனால்தான் சபை மக்கள் நாங்கள் உலகதரத்திற்கு வந்து விட்டோமென்று கூறுகிறார்கள். வெளியே உள்ளவர்கள் இதை அறியமாட்டார்கள். உள்ளே இருப்பவர்கள் மட்டும் மோசே திரைச்சீலையினால் முகத்தை மூடியது போல அறிகிறார்கள். "மோசே தன் முகத்தின் மேல் முக்காடு போட்டுக் கொண்டது போல நாங்கள் போடுகிறதில்லை" (2 கொரி 3:13). மனந்திரும்பி கர்த்தரிடம் காத்திருப்பவர்கள் இயேசுவை இருதயங்களில் ஏற்றுக்கொள்கிறார்கள்.

உண்மையான பரிசுத்த ஆவியானவரை அறிந்து கொள்வது எப்படி? உண்மையாக மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொண்டவனுக்கு பரிசுத்த ஆவியானவர் அளிக்கப்படுவார். "வேறு ஆவி கொடுக்கப்படுவதில்லை" என்று பவுல் கூறுகிறார் (2கொரி 11:4). ஆவி எங்கிருந்து வருகிறது? தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24). சாத்தான் பொல்லாத ஆவி (மத்தேயு 12:43).

தேவனுடைய படைப்புகளில் போலித்தனத்தை உருவாக்குவதே சாத்தானின் வேலையாகும். போலியான இயேசுவை உருவாக்குவது போல போலியான ஆவியையும் உருவாக்கு கிறான். மனிதனின் நன்மைக்கென்று தேவ ஆவி அருளப் படுகிறது. மனிதனை அழிக்கவே பொல்லாத ஆவி செயல் படுகிறது. ஆகவே, உண்மையான ஆவியை அறிந்தவன் பொல்லாத ஆவியுடன் போராடவேண்டும்.

"நமக்கு மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்லாது, துரைத் தனங்களோடும், அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்த கார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு" (எபேசியர் 6:12). தேவன் இருளிலிருந்து நம்மை உயர்த்தி சத்தியத்திற்காக நிறுத்தினார். ஆனால் வெளிச்சத்தி லிருந்து நம்மை இருளுக்கு இழுப்பதற்கு காணமுடியாத ஆவிகள் கிரியை செய்வதால் அதற்கு எதிராக போராட வேண்டும். அது ஆவியாயிருப்பதால் ஜெபத்தினால் மட்டுமே முறியடிக்க முடியும். நாம் ஜெபிக்கும்போது தேவன் நம்மை பாதுகாப்புடன் வைக்கிறார்.

நாம் ஜெபிக்கும்போது சத்தியத்தோடும், பரிசுத்த ஆவிக்குள் நிறைந்து ஜெபிக்கவேண்டும். "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும் போது, பரமபிதா பரிசுத்த ஆவியை கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" (மத்தேயு 7 : 11). "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது அவர் உங்களை சகல சத்தியத் திற்குள்ளும் வழி நடத்துவார்" (யோவான் 16:13). இதைத்தான் தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார்.

நமது சுயநல வாழ்வில் செயல்படும்போது இது பொதுவாக நடைபெறுகிறது. இயேசு கூறியது போல அசுத்த ஆவி ஒரு மனுஷனை விட்டு புறப்படும்போது வறண்ட இடங்களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும் கண்டடையாமல் நான் விட்டு வந்த என் வீட்டுக்குத் திரும்பிபோவேன் என்று சொல்லி, அதில் வரும்போது அது பெருக்கி ஜோடிக்கப்பட்டிருக்க கண்டு, திரும்பி போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக் கொண்டு வந்து, உட்புகுந்து செயல்படுத்தும்

நாம் ஜீவிக்கும்போது பெலவீனமடையும் போது காலப்போக்கில் நடக்கும். நமது ஜெபக்குறைவாலும் அக்கரை குறைவினாலும் நடைபெறுவதால் யாரையும் நியாயந்தீர்க்க முடியாது (மத்தேயு 7:1).

கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் ஒரு குடிகாரர் எனது சொந்த ஊரிலிருந்தார். ஒருநாள் நண்பரால் ஜெபகூட்டத்திற்கு அழைத்து வரப்பட்டார். வீட்டுக்கு திரும்பியபோது கெட்ட குமாரனைப் போல மனந்திரும்பி, மக்களுக்கு சாட்சியாக மாறினார். ஆனால், ஆறு ஆண்டுகளுக்கு பிறகு தனது பழைய தீய பழக்கங்களுக்கு மாறினார். மிகவும் மோசமான நிலையில் சாலையில் மரித்துப்போனார்.

அநேகர் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றும் பிறகு அர்ப்பணிப்பை இழந்து விடுகிறார்கள். ஆகவே, எபிரேயர் நிருபத்தில் அனைவருக்கும் எச்சரிக்கையாக, "ஏனெனில் ஒரு தரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியை பெற்றும் தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்து போனவர்கள், தேவனுடைய குமாரனை தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானம் படுத்துகிறபடியால் மனந்திரும்புகிறதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிப்பது கூடாத காரியம்" (எபிரேயர் 4:4-6). இது விசுவாசிகளுக்கு மட்டுமன்றி தேவனுடைய ஊழியர்களுக்கும் பொருந்தும். ஆகவே. தேவ பிள்ளைகள் உலகத்தில் ஜாக்கிரதையாக வாழ வேண்டும்.

கடைசிகாலத்தில் போலித்தனமான ஆவியை திருச்சபைகளுக்குள் சாத்தான் அனுப்புகிறான். அநேக தீர்க்கதரிசிகள் முட்டாள்தனமாக வீண் புகழ்ச்சி அடைந்து அநேக மக்களை தவறான பாதையில் நடத்துகிறார்கள் (எரேமியா 23:15). பணத்திற்காக சாத்தானுக்கு அர்ப்பணித்தவர்களை தேவன் ஒருபோதும் விடமாட்டார். தீர்க்கதரிசனம் நல்லதுதான். ஆனால் தேவனுடைய செய்தி அதை விட பெரிதாகும். தேவனுடைய கிருபை வரத்தை தவறாக பயன்படுத்தாதீர்கள்.

ஒருமுறை Dr.P.G.அவர்கள் தொலைபேசியில் குறுஞ் செய்தி அனுப்பியிருந்தார். "அநேகர் இயேசுவின் சிலுவையில் அறையப்பட்டதை தங்களுக்கு தனிப்பட்ட ஆதாயத்துக்காக பயன் படுத்துகிறார்கள்" என்றார். நான் ஆம், தேவன் அவர்களை விட மாட்டார் என்றேன். இதில் எல்லாரும் அடங்குவார்கள்.

"எவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 23:24). ஆகவே தான் இயேசு, "அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயம் செய்யட்டும், அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன். அவனுடைய கிரியைகளின்படி நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது" (வெளி 12:11-12). ஆகவே தேவனுடைய ஊழியத்தை செய்கிறவர்கள் ஜெபத்தின் மூலம் ஆவியின் கனிகளை வெளிப்படுத்தவேண்டும். சாத்தானை பயமுறுத்தவேண்டும். இல்லையெனில், சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்கு தடையாக நாமே காரணமாக இருப்போம்.

★★★ ★★★

அத்தியாயம் 7

மற்றொரு சுவிசேஷப்பணி என்றால் என்ன?

பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவரான தோமா அப்போஸ் தலன் கி.பி. 52ல் கேரளாவிலுள்ள மலங்கராவில் வந்தார். 'உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிகளுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்ற கட்டளையை கடைபிடித்தார்' (மாற்கு 16:15). அநேக இந்துக்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்தார். இயேசு கிறிஸ்து மூலம் நித்தியஜீவன் வருகிறது என்பதை வலியுறுத்தினார். விசுவாசித்தவர்களை தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் கொடுத்தார். அவர்களை மணவாட்டியாகிய சபையில் இணைத்தார். இந்த புத்தகத்தை பாஸ்டர். ஜாய் பொன்னூஸ் வீட்டில் உபவாசித்து ஜெபத்துடன் எழுதுகிறேன். திருவல்லா, அருகில் நிரணம் என்ற ஊரில் கி.பி.54 ல் தூயதோமா ஆற்றில் அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுத்த இடமாகும்.

இந்த இடத்தில் உட்கார்ந்து தேமா எப்படி இருந்திருப்பார் என்று கற்பனை செய்கிறேன். பல்வேறு கேள்விகள் மனதில் எழும்புகின்றன. இந்த இடம் ஒரு காடாக இருந்திருக்கலாம். எப்படி அவர் இங்கு வந்திருக்கமுடியும்? போக்குவரத்து வசதிகளும் தொலை தொடர்பு வசதிகளும் அன்று கிடையாது. அவருடைய மொழியை
முடியாத பல்வேறு கேள்விகள் எனது மனதில் எழும்புகின்றன

மலங்கரா மக்கள் மத்தியில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு தூய தோமையார் பல்வேறு கடினங்களை அனுபவித்திருக்கலாம். இங்கு ஏழு சபைகளை நிறுவியிருக்கிறார். பிறகு தமிழ்நாட்டிற்கு சென்று அநேக சபைகளை நிறுவினார். இறுதியில் சென்னையில் கிறிஸ்துவுக்கு இரத்தசாட்சியாக மரித்தார். இன்று சென்னையில் தூய தோமையாரின் திருத்தலம் திருச்சபை வரலாற்றில் முக்கிய இடத்தை வகித்துள்ளது. ஆனால் கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் உள்ள மக்கள் தோமா விட்டு சென்ற பெரிய வேலையாகிய சுவிசேஷ பணியை செய்கிறார்களா? அவர்கள் முழு மனதுடன் செய்திருந்தால் இந்தியா எப்போதே சுவிசேஷமையமாக்கப் பட்டிருக்கும். இதை தொடர்ந்து செய்ய முடியாமற் போனதின் காரணம் என்ன? தோமாவைப் போல வேதனையும், பிரச்சனை களையும் சந்திக்க தயாராக இல்லை. அதற்கு பதிலாக அவருடைய பெயரில் திருத்தலங்களையும் வரலாற்று சிறப்பு

மிக்க நிறுவனங்களையும் நிறுவி வருடாந்திர விழாக்களை கொண்டாடுகிறார்கள். இது சுவிசேஷப்பணி இல்லையா என்று பலர் கேட்கலாம். பவுலின் மொழியில் இது வித்தியாசமான சுவிசேஷமாகும் (2 கொரி 11:4).

இந்த உலகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து கண்டு பிடிப்புகளும் மனிதனின் வசதிக்காக மட்டுமே. ஆனால் வசதிகள் பெருகும் போது உபத்திரவங்களும் பெருகுகின்றன. உலகத்தில் உபத்திரவம், வியாதி, பிரச்சனைகள், கவலைகள் இல்லையென்றும், விசுவாசித்தால் பரிபூரண வாழ்க்கை கிடைக்கும் என்றும் பிரசங்கிக்கிறார்கள். "உலகத்தில் உங்களுக்கு உபத் திரவங்கள் உண்டு. ஆனால் பயப்படாதிருங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோ 16:33). நாங்கள் உபத்திரவப் பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும். நாங்கள் ஆறுதலடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும் உங்கள் இரட்சிப்புக்கும் ஏதுவாகும். நாங்கள் பாடுபடுகிறது போல நீங்களும் பாடுபட்டு சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்பு பலன் செய்கிறது" (2கொரி 1:6).

பொதுமக்கள் இதை படிக்கும் போது குழப்பமடைவார்கள். ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் உள்ளது போல கிறிஸ்தவ வாழ்வில் துக்கமும் சந்தோஷமும் உள்ளன. ஒரு காரியத்தை குறிப்பாக எடுத்துக்கொண்டால் குழப்பத்தில் முடிவு அடையும். உலகத்தின் சிற்றின்பங்களையும், வசதிகளையும் விட்டு இயேசுவை பின்பற்றினால் பூமியிலும் பரலோகத்திலும் ஏராளமான ஆசீர்வாதங்களை பெறுவார்கள். (லூக்கா 18:29). ஆனால் சாத்தான் இந்த உலகத்திலிருக்கும் வரைக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கு பிரச்சனைகள் உண்டு. இதற்கு எதிராக பிரசங்கிப்பவர்கள் மற்றொரு சுவிசேஷத்தை போலித்தனமாக அறிவிக்கிறார்கள்.

நமது நாட்டில் மற்றொரு குழுவினர் இந்தியாவிலும் வெளி நாட்டிலுமிருந்து ஏராளமான பணத்தை பெற்றுக்கொண்டு பொது நல வேலைகளை செய்து அதில் கவனம் செலுத்துகிறார்கள். இது தேவனுடைய ஊழியம் அல்லவா என்று கேட்கிறார்கள். இவர்களுக்கு பணத்தை கொடுப்பவர்களும் இதே கேள்வியை கேட்கிறார்கள். எங்கு கொடுத்தாலும் அது தேவனுடைய ஊழியம் ஆகிவிடுமா? பவுலும் கூட இது வித்தியாசமான சுவிசேஷப் பணி

என்று கூறுகிறார். உலகத்திலிருந்து தரித்திரம் மற்றும் உபத்திர வங்களை அகற்றவே இயேசு வந்தாரென்று உணருகிறார்கள். அப்படியானால் அவர் கல்வாரியில் பாடுபட்டு மரிகக் வேண்டிய தில்லை. அதற்கு பதிலாக சாத்தானுக்கு அடிபணிந்திருக்கலாமே (மத்தேயு 4:9).

தரித்திரத்தையும், வியாதியையும் ஒழிப்பதற்காக உலக தலைவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இயேசு தமது மகிமையை விட்டு, பணிவிடை ஊழியனாக மாறி, சிலுவையில் மரித்து முழு மனுக்குலத்திற்கும் நித்திய இரட்சிப்பை அளித்தார். "என் மாம்சத்தை புசித்து என் இரத்தத்தை பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு, நான் அவனை கடைசி நாளில் எழுப்புவேன்" (யோவான் 6:54). "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்திலே, சேர்த்துக் கொள்ளுவேன்" (யோவான் 14:3). இ('யசுவை ஏற்றுக் கொள்கிறவர்களின் வாழ்வில் அதிசயமான மாற்றங்கள் நிகழும் என்றார். தங்கள் வாழ்வை முற்றிலும் அர்ப்பணிக்கிறவர்களுக்கு மட்டுமே இது நடக்கும்.

இதை ஆழமாக அறிந்து கொள்வதற்கு இயேசுவை ஏற்றுக் கொண்ட மக்கள், குடும்பங்கள் மற்றும் அவர்கள் வாழ்ந்த இடங்களை ஆராய்ச்சி செய்யவேண்டும். மேலும் வட இந்தியாவில் இயேசுவை அவர்களுக்கு சந்தோஷமும் சமாதானமும் இல்லை. நாம் அனுபவிக்கிறோம், ஏனெனில் நமது முற்பிதாக்கள் இயேசுவை அறிந்து கொண்டார்கள். ஆகவே, தேவனுடைய பெரிய மகிமையை நாம் உணரவேண்டும். நாம் ஏழைகளுக்கும், விதவைகளுக்கும் உதவி செய்வதினால் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள். அவர்களுக்கு உலகபிரகாரமான உதவிகளை தான் செய்கிறேன். ஏனெனில் கிறிஸ்தவர்களை விட அநேகர் நற் பணிகளை செய்து வருகிறார்கள்

ஊழியம் செய்யும் அநேகர் அர்ப்பணிப்பை விட்டு பல்வேறு சமூகநலப்பணிகளை செய்து தங்கள் சாட்சிகளை இழந்து விட்டார்கள். இதற்கு முன்பு கர்த்தருடைய ஊழியத்தில் தாங்கள் அனுபவித்த உபத்திரவங்களைக் குறித்து பேசினார்கள். இப்பொழுது அவர்கள் தங்களுடைய பணத்தேவைகளை குறித்து மட்டும் பேசுகிறார்கள். ஒரு ஊழியரை புதுடில்லியில் சந்தித்த போது ஒரு கோடி ரூபாய்களின் தேவை இருப்பதாகவும் அவைகளை செலுத்தாவிட்டால் அவர் செலவழித்தவைகளை

.இழந்து விடுவார் என்றார், இன்னும் பல கோடி ரூபாய்கள் கடனில் வாழ்கிறோம். தேவன் வழியை திறக்காவிட்டால் பெரிய பிரச்சனையாகிவிடும் என்று கூறுகிறார்கள்.

புதிய அரசாங்கம் பதவி ஏற்றஉடன் அநாதை பிள்ளை களின் விடுதிகள், பள்ளிகள், நற்பணி மன்றங்கள் எல்லாம் நிறுத்தப்பட்டன. நாம் அரசாங்கத்தை மட்டும் குறை கூறிவிட முடியாது. "வேதபாரகர், பரிசேயர், என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" இயேசு சொன்னார் (மத்தேயு 5:20). அரசாங்கம் தேவனால் நிறுவப்பட்டுள்ளது. ஏனெனில் தேவனுடைய பிள்ளைகள் உலகத்தில் சிறந்தவர்களாயிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தொண்டு நற்பணிகள் பேரையும், புகழையுமே அளிக்கும். ஆனால், தேவனுக்கு ஊழியத்தில் மகிமையை செலுத்தாது. இவைகள் இரண்டும் வித்தியாசமானவைகள் என்று அறியவேண்டும். இல்லாவிட்டால் பிலேயாமை போல விழுந்து விடுவோம்.

சமூக நல பணிகளுக்கு கொடுத்தால் பலனை உடனே காணலாம். ஆனால் தேவனுடைய ஊழியத்திற்கென்று உடனே பலனை காண முடியாது. சில இடங்களில் மிஷனரிப் பணிகளை புதிதாக துவங்கினால் ஆத்துமாக்கள் கிடைப்பதற்கு பல்வேறு ஆண்டுகள் ஆகும். ஆகவே. தரிசித்து நடவாமல் விசுவாசத்தில் விதைக்க வேண்டும். "கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத் தோடே அறுவடை செய்வார்கள்"

தங்கள் வாழ்வில் மீதமிருப்பவைகளிலிருந்து கொடுப்பவர்களை விட தங்களுடைய தரித்திரத்திலிருந்தும் கொஞ்சம் வருமானத் திலிருந்தும் கொடுப்பவர்களை தேவன் விரும்புகிறார். ஆகவே தான் இயேசு விதவை எல்லாரைவிட அதிகமாய் கொடுத்தாள் என்றார். விதவையின் சிறிய காசுகளையும் தேவன் அதிகமாய் மதிக்கிறார். அவர் எண்ணிக்கை பாராமல் கொடுக்கும் இருதயத்தை தான் பார்க்கிறார்.

சாரிபாத் ஊரின் விதவையை விட கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடுப்பவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆகவே, இந்த உணர்வுடன் சுவிசேஷப்பணிக்கென்று நாம் கொடுக்க வேண்டும். தரித்திரத்திலிருந்தும் வறுமையிலிருந்தும் கொடுப்பவர்களுடைய "வீட்டில் பாத்திரத்தில் எண்ணெயும் மாவும் செலவழிந்து போவதில்லை" (I இராஜா 17:14). கர்த்தருடைய ஊழியத்திற்கு முதலிடம் அளித்து இந்தியாவை சுவிசேஷப்பணியாற்றுவதற்கு கொடுக்கவேண்டும். இந்த நற்பணியை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

(Our believers in Panchkula, Haryana)

★★★ ★★★

அத்தியாயம் 8

சுவிசேஷப்பணியை யார் செய்யவேண்டும்?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்ட அனைவரும், ஆண்கள் அல்லது பெண்கள் என்று வித்தியாசமின்றி சுவிசேஷப்பணியை செய்யவேண்டும். "நீங்கள் புறப்பட்டுப்போய் சுவிசேஷத்தை பிரசங்கித்து சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி செய்யுங்கள்" (மத்தேயு 28:19-20). இயேசுவின் பிரதான கட்டளையில் இயேசுவை ஏற்றுக்கொண்ட அனைவரும் சுவிசேஷப்பணி செய்யவேண்டு மென்று வலியுறுத்துகிறார். இந்த கட்டளை அனைவருக்கும் பொருந்தும் என்பதை இன்றைய திருச்சபைகள் புரிந்து கொள்ள தவறியதை ஆச்சரியப்படுகிறேன். 90%சதவீதம் கிறிஸ்தவர்கள் இதை குறித்த விழிப்புணர்வின்றி வாழ்கிறார்கள். இந்தியா சுவிசேஷ மையமாக்கப்படாததற்கு இதுவும் ஒரு காரணம். தேவனுடைய ஊழியமானது வேலை இல்லாதவர்களுக்கும், படித்தவர்கள், அழைக்கப்பட்டவர்கள், பாடகர்கள், ஜெபிப்பவர்கள் திறமைசாலிகளுக்கு மட்டுமே பொருந்தும் என்று தவறாக எண்ணுகிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு நானும் இப்படித் தான் நினைத்தேன்.

எனது 23 வயதில் பாஸ்டர் மத்தேயு நயிக்கான் பரம்பில் மூலம் இயேசுவை அறிந்து கொண்டேன். கேரளாவில் திருச்சூர் மாவட்டத்தில் "பொட்டா" என்ற ஊரில் வேதாகமத்தை படித்த பின்னர் எனது வாழ்க்கை படிப்படியாக மாறத்துவங்கியது. ஒரு கன்வென்ஷன் கூட்டத்தில் "எழும்பி பிரகாசி, உன் ஒளி வந்தது" என்ற பாடலை கேட்டபோது யாரோ ஒருவர் என்னோடு பேசுவது போல உணர்ந்தேன். எனக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் பாரம் ஏற்பட்டது. உடனே என் மனைவியோடும் ஜேக்கபைட் சபையோடும் அறிவித்தேன். அவர்கள் சபையில் குருவாகி மிஷனரிப்பணி செய்ய வலியுறுத்தினார்கள். திருச்சபை தலைவர் Rev.தோமஸ் திவானியோஸ் என்பவரை இந்த விஷயமாக சந்தித்தேன். எனது ஆர்வத்தை புரிந்துகொண்டு என்னை இவாஞ்சலிக்கல் அசோசியேஷன் ஆப் ஈஸ்ட் நிறுவனத்தின் தலைவரிடம் அனுப்பினார். பிறகு செல்கிறேன் என்றார். ஆனால், ஒருபோதும் கூறவில்லை. ஏனெனில் திருமணமாகாதவர்களை அவர் சிபாரிசு செய்வதில்லை.

பிறகு பெரிய எதிர்பார்ப்போடு மூவாற்று புழையிலுள்ள பெனியேல் வேதாகம கல்லூரிக்கு சென்றேன். அவர்கள் கூட என்னை ஏற்றுக் கொள்ளாமல் போதகரிடமிருந்து கடிதம் வாங்கி வர சொன்னார்கள். பிறகு மோசேயைப்போல அழைப்பை விட்டு விலகி ரோமன் கத்தோலிக்க பிண்ணனியிலிருந்த இராணுவ செவிலிய பெண்ணை திருமணம் செய்து டெல்லிக்கு சென்றேன். எனது திருமண வாழ்க்கை ஒரு பாலைவன பயணமாயிருந்தது.

எனக்கு நல்ல வேலை இல்லை, பிள்ளைகள் இல்லை. குடும்ப வாழ்வில் சமாதானம் இல்லை, எல்லா இடங்களிலும் எதிரிகள். நான் தேவனிடம் திரும்பி வந்து விசுவாசத்தில் வளர்ந்தேன். மருத்துவ பரிசோதனையில் ஒலிகோ ஸ்பெர்மியா என்ற பலன் வந்தது. ஆனால் தேவன் அற்புதமாக பிள்ளைகளை கொடுத்தார். எனது மகன் ஐந்து வயதான போது வியாதிப்பட்டான். எனது மகன் மரிக்க போகிறான் என்ற செய்தி துபாயில் எனக்கு செய்தி வந்தது. உடனே அதே இடத்தில் உட்கார்ந்து ஜெபித்தேன். தேவனிடம், என் மகனை உயிரோடு வைத்தால், நான் உயிரோடிக்கும் நாள் வரைக்கும் உமக்கு ஊழியம் செய்வேன் என்று ஜெபித்தேன். தேவன் ஜெபத்தை கேட்டு எனது மகன் அற்புதமாக குணமடைந்தான். 40 வயதில் எனது மிஷனரிப் பணியை கர்த்தருடைய வார்த்தையின் படி துவங்கினேன்.

எனது மனைவியும் குடும்பமும் சுவிசேஷப்பணிக்கு எதிராக இருந்தார்கள். ஆனால் தேவனுக்கு வாக்களித்தபடி முன்னேறி சென்றேன். தேவன் புடிப்படியாக தடைகளை அகற்றி எனது மனைவியை விசுவாசத்தில் கொண்டு வந்தார். செயின்ட் தாமஸ் மவுண்டில் இராணுவ ஆஸ்பத்திரியில் எனது மனைவி பணியாற்றியதால் சென்னையில் ஒரு மிஷனரி ஸ்தாபனத்துடன் இணைந்து பணியாற்றினேன். வட இந்தியாவிற்கு செல்ல பாரம் இருந்தபடியால் 45 வயதில் வட இந்தியாவுக்கு மிஷனரிபணிக்கு வந்தேன்.

வேதாகம அறிவு குறைவிலும், மக்களின் மொழியை அறியாதபடியினாலும் ஒருவரும் எனக்கு உதவி செய்யவில்லை. தாவீதைப்போல் கதறி அழுதேன். எனது தகப்பன் 1993-ல் நேரியமங்களத்தில் பேருந்து விபத்தில் மரித்து போதிலும் கூட இப்படி நான் அழவில்லை. பரம தகப்பன் எங்கள் கண்ணீருக்கு பதிலளித்து எனது ஞானத்திற்கும் திறமைக்கும் மேலாக உயர்த்தினார்.

எனக்கு தேவன் வாய்ப்பளித்தார். அவள் தனது மகன் பல ஆண்டுகளுக்கு முன்பு காணாமற்போனதைப்பற்றி கவலை பட்டுக்கொண்டிருந்தாள். நான் அவளுக்கு இயேசுவை அறிவித்து இருவரும் ஒருமனப்பட்டு ஜெபித்தோம். அற்புதமாக அவள் மகன் திரும்ப வந்தான்.



(with a lady from Bihar)

இதுதான் வடஇந்தியாவில் எனது ஊழியத்தின் ஆரம்பம். பல மதங்களிலிருந்து அநேகர் ஜெபத்திற்கு அழைத்தார்கள். அற்புதங்கள் ஏராளம் நடந்தன. வட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு செல்ல தேவன் வாசலை திறந்தார். இந்தியாவின் தலை சிறந்த மிஷனரி நிறுவனத்தில் நான் ஊழியராயிருந்தேன். மனிதனால் முடியாது ஜீவனுள்ள தேவனால் ஆகும். இந்த புத்தகத்தை வாசிக்கிறவர்கள் அனைவரும் பவுல் கூறுவதுபோல மறுரூபமாக்கப்படுவீர்கள். "இந்த கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப் போலாகும் படி தேவனை வேண்டிக்கொள்கிறேன்" (அப் 26:29). நாம் விரும்பினால் தேவனுக்காக அநேக காரியங்களை செய்யலாம்.

எனது மனைவி மிஷனரி பணிகளுக்கு எதிராக இருந்தாள். வாழ்வதற்கு இதுவும் ஒரு வழிமுறை என்று அவள் சிந்தித்தாள். அவளுக்கு தாய் இல்லாததினால் பல்வேறு கடினங்கள் வழியாக கடந்து வந்ததினால் இராணுவ செவிலியர் பள்ளியில் இந்தியாவில் முதல் மாணவியாக தேர்ச்சி பெற்றாள். அவள் பெருமை அடைந்திருக்கலாம். திறமையில்லாத என்னை போன்ற வேறொருவரைக் கூட திருமணம் செய்திருக்கலாம். இருவரும் கேரளாவின் இடுக்கி மாவட்டத்தை தவிர பொதுவாக வெறொரு ஒற்றுமையும் இல்லை. நான் NCC யில் இருந்தபோது இராணுவவீரர்கள் முரட்டுத்தனமாயிருப்பதை பார்த்திருக்கிறேன். ஆனால் இப்படி கோபமான மனைவியை நான் பார்க்கவில்லை. திருமணத்திற்கு பிறகு நான் டெல்லியிலும் அவள் அம்பலாவிலும் இருந்தோம். நாங்கள் இருவரும் சந்திக்கும்போது ஒரு பாகிஸ்தானி இந்தியரை சந்திப்பது போலிருக்கும்.

நாங்கள் கீரியும் பாம்புபோல் சண்டையிடுவோம். ஆனாலும் எங்களுக்குள் மாற்றம் ஏற்படவில்லை. எங்களுக்கு பிள்ளைகள் இல்லாததினால் மக்கள் எங்களை கேலி செய்தார்கள். மனைவிக்கு இருதயநோய் இருந்தபடியால் அவளை தரக் குறைவாக பேசினார்கள். மருத்துவர்கள் இனி குழந்தையே பிறக்காது என்று கூறியபோதிலும் தேவனிடம் நெருங்கினோம். தேவன் இரண்டு பிள்ளைகளைக் கொடுத்தார். இருதய நோய் இருந்தபோதிலும் தேவன் அவளை உயர்த்தினார். இராணுவத்தின் வரலாற்றில் இப்படிப்பட்ட குறைபாடுகள் உள்ளவரை பதவி உயர்வு அளிப்பது முடியாத காரியம். தேவன் தேவனுக்கு இவைகள் எல்லாம் லேசான காரியம்.

ஊழியத்துக்கு என்னை ஒப்புக்கொடுத்த பிறகு, ஒருபோதும் குணமடையமாட்டான். அவன் மனநல நோயாளியாக இருப்பான் என்று மருத்துவர்கள் கூறியபோதிலும் எனது மகன் முற்றிலும் குணமடைந்தான். எனது மகனின் வியாதி மனைவியின் பெருமையை குறைத்தது. அவள் ஊழியத்தில் ஆர்வம் காட்டினாள். மருத்துவ விஞ்ஞானம் அவளுக்கும் மகனின் வியாதிக்கும் நம்பிக்கை அளிக்காமற்போனபோது தேவன் அந்த காகித அறிக்கைகளை வெறுமையாக்கி எல்லாவற்றையும் மாற்றினார். இப்படிப்பட்ட நிலையில் எப்படி அவள் சர்வ வல்லவருக்கு ஊழியம் செய்யாமலிருப்பார்?

கனிசெழுப்பணியை செய்ய வாஞ்சையிலிருந்தும் (மிஷனரி) பணியை செய்ய முடியாமலிருப்பவர்களுக்கு தேவன் உதவிச் செய்வாராக! நீங்கள் முற்றிலும் சிருஷ்டிகரை சார்ந்திருக்க வேண்டும். பூமிக்குரிய ஊழிய நிறுவனங்களை சார்ந்திருக்கக்கூடாது. அநேகர் ஊழியத்தில் ஆசீர்வதிக்கப் படாமலிருப்பதற்கு காரணம் அவர்கள் இயேசுவை சார்ந்திராமல் நிறுவனங்களை சார்ந்திருக்கிறார்கள். நீங்கள் ஊழியம் செய்வதற்கு ஒரு நிறுவனம் தேவை. ஆனால் இராணுவத்திலுள்ள வர்களை திருப்திபடுத்துவதற்காக அவர்கள் அளிக்கும் எளிதான பணத்தொகையை நம்பத் தேவையில்லை. "அவருடைய முகத்தை நோக்கிப் பார்த்தவர்கள் வெட்கப்படவில்லை, அவர்கள் முகங்கள் பிரகாசமடைந்தன. ஏனெனில் அவரே அல்பாவும் ஒமேகாவுமாயிருக்கிறார்" நடவடிக்கை மாறும் போது நிறுவனத்தின் வழி

தேவனுடைய நபராகவும், குடும்பமாகவும் ஒரு திருச்சபையாகவும் ஊழியஞ் செய்ய வேண்டும். இதற்காக நமது சக்தியையும், திறமையை சார்ந்திராமல் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை சார்ந்திருக்கவேண்டும். அப்பொழுது தேவன் நமக்கு வாசல்களை திறப்பார். இன்று ஒருசில சபைகளும் மனிதர்களுமே இப்படி ஊழியம் செய்கிறார்கள். சிலர் நன்றாக ஆரம்பித்து பணமும், புகழும் வந்த உடனே "போதும் கர்த்தாவே" என்று திருப்தி அடைந்து விடுவார்கள். சில சபைகள் தாங்கள் விரும்பியது போல செயல்பட்டு மற்றவர்களை தவறாக வழி நடத்துகிறார்கள். மற்றும் பலர் தங்களை குறித்து என்ன நினைப்பார்களோ என்று நினைத்து பகுதி இருதயத்தோடு ஊழியம் செய்கிறார்கள். நாம் ஊழியம் செய்யாவிட்டால் கனிகளும் இருக்காது.

ஆகவே எப்படிப்பட்டவர்கள் என்று நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும். "நான் உற்சாகமமாய் அப்படி செய்தால் எனக்குப் பலன் உண்டு. ஆதலால் எனக்கு பலன் என்ன"? (I கொரி 9:17). தேவன் தனிநபருக்கும் முழு திருச்சபைக்கும் பலன் அளிக்கிறவர். தேவன் என்றும் மாறாதவராயிருக்கிறார். தேவனுடைய ஊழியத்தை உண்மையாய் செய்கிறவர்களும் நூறத்தனையாக பலனை இந்த உலகத்திலும் நித்திய ஜீவனையும் பெறுவார்கள் (மத்தேயு 19:29). இதைப்போல எந்த அரசாங்கமோ அல்லது கம்பெனியோ உறுதி அளிக்கமுடியுமா? ஒருபோதும் இல்லை! ஆனால் இதை எத்தனை தனிநபர்களும் சபைகளும் பெற்றுக்கொள்ளுகிறார்கள் தெரியுமா? இது பெரிய கேள்வியாக நமக்கு முன்பாக இருக்கிறது.

விதைப்பதிலும், அறுப்பதிலும் அநேக ஊழியர்கள் அதே போல இருக்கிறார்கள். அவர்கள் வடித்த கண்ணீரை குறித்து பல்வேறு கதைகள் உள்ளன. இயேசுவை அறியாத மக்கள் கூட்டத்தினால் சூழப்பட்டு கேலி செய்யுமளவிலிருக்கிறார்கள். தேவன் தமது வார்த்தையை திரும்ப எடுப்பாரா? ஒருபோதும் இல்லை. தேவனை பிரியப்படுத்துவதற்காக இதை நான் எழுத வில்லை. வட இந்தியாவில் குறுகிய காலம் செய்த ஊழியத்தின் பலனாக இந்த சத்தியத்தை எழுதுகிறேன். நூறு மடங்கான ஆசீர் வாதத்துடன் "முந்தினோர் அநேகர் பிந்தினோராயும் பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள்" (மத்தேயு 19:30)

ஆரம்பத்தில் இந்த வசனம் விசுவாசிகளுக்கு மட்டும் தான் என்று நினைத்தேன். பிறகு அனைவருக்குமுரியதென்று அறிந்தேன். உலக வேலைகளிலிருப்பவர்கள் பல ஆண்டுகள் வேலை செய்ததாகக் கூறிகிறார்கள். ஆனால் தேவனுடைய ஊழியத்தில் அப்படி இல்லை. நாம் அனுதினமும் ஊழியம் செய்யாவிட்டால், முழுமையாக அர்ப்பணிக்காவிட்டால். தேவன் விருப்பமடையாமல் சவுலின் மேலிருந்த அபிஷேகத்தை மாற்றி, தாவீதுக்கு அளித்தது போல நமது ஆசீர்வாதங்களை எடுத்து மற்றவர்களுக்கு கொடுப்பார். நாம் நீண்ட வரலாற்றை கூறினாலும் அபிஷேகம் இருக்காது. அநேகர் ஆரம்பத்தில் நன்றாக ஆரம்பித்தார்கள். பிறகு ஓய்வு எடுத்துக்கொண்டு தங்கள் பாரம்பரியங்களை பற்றி கூறுகிறார்களே தவிர உண்மையில் ஆசீர்வாதங்களை பெறுவதில்லை.

தேவனுடைய ஊழியர்கள் சர்வ ஆயுத வர்க்கங்களை தரித்திரவர்களாய், முற்றிலும் அர்ப்பணித்தவர்களாய் கடினமாக ஊழியம் செய்யவேண்டும். ஓய்வு எடுக்காமல் நன்றாக ஓடி ஓய்வு பெற மாட்டோம் என்ற நம்பிக்கையோடு பவுலைப் போல தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து செய்யவேண்டும். "நல்ல போராட்டத்தை போராடினேன், விசுவாசத்தை காத்துக் கொண்டேன், ஓட்டத்தை முடித்தேன்" (2 தீமோ 4:7) என்றார். தேவனுடைய ஊழியத்தை ஒருவரின் விருப்பத்தின்படி அல்ல, தேவனுடைய சித்தத்தின்படி செய்யவேண்டும். தாவீதைப் போல அனுதினமும் தேவனுடைய சித்தத்தை பகுத்தறிய வேண்டும். ஆகவே விசுவாசிகளைவிட ஊழியர்கள் அதிகமாய் ஜெபிக்க வேண்டும்.

மத்தேயு 20 அதிகாரத்தில் திராட்சை தோட்டத்தில் பணியாற்றும் வேலைக்காரனைப்போல் ஊழியர்கள் இருக்கிறார்கள் என்று இயேசு கூறினார். (மத்தேயு 20:1-2). திராட்சை தோட்டத்தில் பணியாற்றும் அனைவருக்கும் ஒரேவேலை கொடுக்கப்படுவதில்லை. சிலருக்கு புல்லை வெட்டுவதற்கும், தோட்டத்தை சுத்தம் செய்வதற்கும், சிலருக்கு நிலத்தை உழுது கற்பாறைகளை உடைக்கும் பொறுப்புகள் அளிக்கப்படுகின்றன.

எஜமானர் அளிக்கும் எந்த வேலையும் எந்த ஆயுதமானாலும் சரி வேலையாட்கள் தங்கள் ஆயுதங்களைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை. ஒவ்வொரு நாளும் தங்கள் எஜமானரை சந்தித்து மிஷனரிப் பணிதலத்தில் அநேக ஊழியர்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். தங்கள் எஜமானரை பார்க்க (ஜெபிக்க) நேர மில்லாமல் திராட்சை தோட்டத்தில் நேரத்தை வீணாக்குகிறார்கள். இவர்கள் புல்லை திண்ணாமலும் மாடுகளை புல்லை திண்ண விடாமலுமிருக்கிற நாயை போன்றவர்கள். பணித்தலங்களில் சுற்றித்திரிந்து எஜமானருக்கு தீய பெயரை ஏற்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட குள்ளநரிகள் சுவிசேஷப்பணியின் நல்ல வேலையை கெடுத்து விடுகிறார்கள்.

வேளாண்மை துறையில் பணியாற்றுகிறவர்கள் இதை நன்றாக புரிந்து கொள்வார்கள். எனது தகப்பன் ஒரு பெரிய விவசாயி. எங்கள் பண்ணையில் தினமும் இரண்டுபேர் வேலை செய்வார்கள். அவர்கள் காலையில் வரும்போது அன்றைய நாளுக்குரிய ஆயுதங்களை கொடுப்போம். அப்பொழுதுதான் அவர்கள் வேலை செய்வார்கள். ஒரே மாதிரியான ஆயுதங்கள் அனுதினமும் தேவைப்படுவதில்லை. இருவருக்கும் வித்தியாசமான வேலைகளை கொடுப்போம். ஏனெனில் ஒருவர் ஆண் மற்றொருவர் பெண். மரத்தில் ஏறுவதும் பாறைகளை உடைப்பதும் பெண்களுக்கு அளிப்பதில்லை. அதைப்போலவே தேவன் தமது திராணிக்கும் திறமைக்கும் ஏற்றாற்போல் ஊழியத்தை கொடுக்கிறார். ஆனால் இன்று கண்மூடித்தனமாக சிலர் விதிமுறைகளை "ஒரு மாடு முன்னால் சென்றால் அதை பின்பற்றி அநேக மாடுகள் செல்வது போல" செயல்படுகிறார்கள்.

உங்களுக்கு முன்பாக ஒருவர் செய்ததை நாம் அனுசரித்து கடைபிடிப்பது தேவனுடைய ஊழியம் அல்ல, அப்படி செய்தால் மாட்டைப்போல் குழியில் விழுந்து தோல்வி அடைவீர்கள். வெள்ளை ஆடை அணிந்தாலே தேவனுடைய ஊழியராகிவிடலாமென்று பலர் நினைக்கிறார்கள். சண்டிகரில் ராம்பிரசாத் என்ற ஒருவர் இந்து பின்னணியிலிருந்து இரட்சிக்கப்பட்டு நல்ல சாட்சியுள்ளவராக அந்நிய பாஷையில் ஜெபித்தார். கணவரும் மனைவியும் வெள்ளை ஆடைகளை அணிந்து பன்னிரெண்டு ஆண்டுகள் ஊழியம் செய்தனர். வெளிபுறத்தில் நன்றாக தோற்றமளித்தாலும் உட்புறத்தில் வெறுமையாக இருந்தார்கள். பிறகு அவருடைய மனைவி விபத்தில் மரித்ததால் அவர் காவலாளியாக பணியாற்றினார்.

நான் பெரிய ஊழியக்காரன் என்று மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குள்ளிருப்பதை தேவன் ஒருவரே அறிவார். தேவன் நம்மை நம்பி ஊழியத்தை அளிக்க வேண்டுமென்றால். நமது உட்புறத்தில் மாற்றம் ஏற்படவேண்டும். தேவன் வெளிப்புறத்தை பாராமல் இருதயத்தை பார்க்கிறார். மேய்ப்பனாகிய இயேசுவின் குரலை பகுத்தறிந்து அவருடைய வழிகளில் நடக்க வேண்டும் (யோவான் 10:3-4).

தேவன் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள். போதகர்கள் மற்றும் மேய்ப்பர்களை நியமித்திருக்கிறார். சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைவதற்காகவும் தேவனுடைய மக்களை கிறிஸ்தவ ஊழியத்திற்கென்று ஆயத்தப்படுத்தவே இப்படி செய்தார் (எபேசியர் 4:11).

“தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும் இரண்டாவது தீர்க்கதரிசிகளையும். மூன்றாவது போதகர்களையும் பின்பு அற்புதங்களையும், வரங்களையும், ஊழியர்களையும், ஆளுகைகளையும் பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினோம்” (I கொரி 12:28).

ஒவ்வொரு சீஷரும் இதில் ஒரு ஊழியத்தை செய்ய வேண்டும். தேவன் நமக்கு எந்த கருவியை அளிக்கிறார் என்றும் எந்த ஊழியத்தை செய்யவேண்டுமென்றும் கேட்கவேண்டும். தேவன் தமது வார்த்தை அல்லது தேவ மனிதர்கள் மூலம் சில சமயங்களில் தரிசனங்கள் கனவுகள் மூலம் நமக்கு வெளிப் படுத்துவார். இதற்காக பொறுமையாக ஜெபத்தில் காத்திருக்க வேண்டும். தேவனுக்கென்று ஏதேனும் செய்யவேண்டுமெனில், அவர் பெரிய காரியங்களை உங்கள் மூலம் செய்வார். ஏனெனில் அவருடைய கரங்களில் பெரிய பலன்கள் உள்ளன. பரலோகத் திலிருக்கும் இயேசு "இதோ சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளுக்கு தக்கபடி நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது" (வெளி 22:12).

★ ★ ★ ★ ★ ★

அத்தியாயம் 9

யாருக்கு பிரசங்கிக்க வேண்டும்?

அநேகர் சுவிசேஷப்பணியில் ஆர்வமாயிருக்கிறார்கள். ஆனால் யாருக்கு பிரசங்கிக்கவேண்டுமென்ற நிச்சயமில்லை. உன் அயலானைப்போல உன்னையும் நேசி என்று இயேசு கூறியதால் அயலகத்தாருக்கு பிரசங்கியுங்கள் என்று சிலர் கூறுகிறார்கள். தீர்க்கதரிசி தனது சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப் படமாட்டான் என்று இயேசு கூறியதை பலர் அறிந்து வெகு தொலைவிலுள்ள மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்றார்கள். ஆனால் இயேசு கூறியதை பார்க்கலாம், "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15). "எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" (லூக்கா 24:47).

இயேசு கூறியது போல அருகிலும் தொலைவிலுள்ள எல்லா மக்களுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும். இன்று நான் எங்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று ஜெபத்தில் அனுதினமும் கேட்க வேண்டும். விதைப்பவனின் உவமையில் இயேசு வார்த்தையை விதையுடன் ஒப்பிட்டார். நாம் எல்லாரும் விதைக்கிறவர்கள். நல்ல நிலத்தில் விதையை விதைப்பதே முக்கியமான விதைக்கிறவர்கள். நல்ல நிலத்தில் விதையை விதைப்பதே முக்கியமான குறிக்கோளாகும். அநேக, ஊழியர்கள் விதை எல்லா இடங்களிலும் கரிசனையில்லாமல் விதைத்து விடுகிறார்கள். கடினமாக உழைத்தாலும் பலன்கள் குறைவாகவே உள்ளது. தேவன் நமது இருதயத்தை அறிந்திருக்கிறார். நல்ல ஊழியன் எஜமானின் ஐசுவரியத்தை பரிபாலிப்பது எப்படி என்பதை அறிந்து கடினமாக ஞானத்தோடு விதைக்கும்போது விதைப்பவனை நேசித்து ஏற்றுக்கொள்கிறார்.

எனது தகப்பன் நெல்லிமாவட்டம் என்ற கோதமங்கலத்தின் அருகில் கேரளாவில் பிறந்தார். விவசாய குடும்பத்தில் இருந்த படியால் அந்த ஊரிலுள்ள பணக்காரர் இந்து மனிதர். என் தகப்பனை அழைத்து விதைக்கும் காலத்தில் நெல்லை விதைக்கும்படி அழைத்தார். அந்த நாட்களில் ஏன் தகப்பனை அழைத்தார் என்று புரியவில்லை. இன்று விதைப்பவனின் உவமையை படித்தபிறகு அதை புரிந்து கொண்டேன். நன்றாக விதைப்பவன் கர்த்தரிடமிருந்து அன்பையும் பெறுவான்.

இதை அறியாமலிருந்த கூட இருக்கோவிலுள்ள ஒரு பிஷப் ஜனவரியில் என்று இதைப்பற்றி ஒரு வேலை அளிக்குமாறு கேட்டேன். அவர் என்னை விருப்பாதுடியால் ஒரு நாற்காலியில் அவருடைய அலுவலகத்தில் உட்கார்ந்தால் கொஞ்சம் சம்பளம் தருவதாக கூறினார். நான் மிகவும் வேதனையடைந்தேன். இந்த வேதனையால் விதைப்பதை பிறகு செய்வதாக தள்ளிப்போட்டேன். விதைப்பது கடினம் என்று தேவனிடமிருந்து கற்றுக்கொண்டால் பலருக்கு முன்பாகவும் வைக்க இருக்க தேவையில்லை. தேவன் மனதை நம்பிய அறுப்பு நூறுமடங்கு நம்மை ஆசீர்வதிப்பார்.

வேதாகமத்திலுள்ள எல்லா வார்த்தைகளும் விதைகள் தான். எந்த விதையை உங்களுக்கு முன்பாக உட்கார்ந்திருப்பவருக்கு கொடுக்க வேண்டுமென்பதை அறிவீர்கள். ஆகவே விதைக்க செல்வதற்கு முன்பு ஜனங்களை நேருக்கில் சந்தித்தால் நிலத்தை குறித்தும் விதையை குறித்தும் அறியலாம். மனிதனின் பல வகையை மனநிலைகளும் பல வகையான பாம்புகளைப் போல உள்ளன. ஆகவே தான் இயேசு "சர்ப்பங்களின் பிள்ளைகளே" என்று அழைத்தார் (மத் 23:33). இயேசுவை சுற்றிலும் பலவேறு வகையான மக்கள் இருந்தார்கள். புறம்பே உள்ளவர்களுக்கு இதை புரிந்து கொள்ளமுடியாது. நாம் விதைக்க செல்வதற்கு முன்பு நிலத்தை அறியும்படி பரிசுத்த ஆவியானவர் நமக்கு அருளப்பட்டிருக்கிறார். மூன்று வகையான மக்களுக்கு நாம் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவேண்டும்.

1. தரித்திரருக்கு பிரசங்கிக்க வேண்டும்

தரித்திரர் யார்? வேதாகமத்தின் அடிப்படையில் தரித்திரர் என்றால் பொருளாதாரத்திலும் பணத்திலும் குறைவாயிருப்பவர்கள் அல்ல. வாழ்வில் வெறுமையை அனுபவிக்கிறவர்களை குறிக்கிறது. சில மக்களுக்கு பணம், பிள்ளைகள், வேலைகள் உள்ளன. நல்ல வருமானம் இருந்தபோதிலும் வெறுமையை அனுபவிக்கிறார்கள். எல்லா மதங்களிலும் இப்படிப்பட்ட மக்களை காணலாம். அவர்களுக்கு இயேசுவின் சுவிசேஷம் தேவைப்படுகிறது. ஆரம்பத்தில் அவர்கள் எதிர்க்கிறவர்களைப் போலிருந்தாலும் பிறகு ஏற்றுக்கொள்வார்கள்.

வேதாகமங்களை கிழித்து போட்டவர்களாயிருந்தார். *சீக்கியரில்* பெரிய பணக்காரரின் மகனாயிருந்த போதிலும் வாழ்வில் வெறுமையை அனுபவித்தார். தனது உணர்வுகளை விட்டு விலகியிருப்பதற்கு அநேக காரியங்களை செய்தார். இறுதியில் தற்கொலை செய்ய முயன்றார். அப்பொழுது நலன் நமது இரட்சகரை குறித்து கேள்விப்பட்டார். இயேசுவை ஏற்றுக்கொண்டஉடனே பவுலைப்போல உலகத்திலுள்ளவைகளை வெறுத்து பஞ்சாபிலும், பூட்டானிலும் ஒரு பரிசுத்தவானைப் போல வாழ்ந்தார். நம்மை சுற்றிலுமுள்ளவர்களுக்கு சமாதானத்தின் ராஜா தேவைப்படுகிறார். தம்மை உண்மையாய் நேசிப்பவர்களை தேவன் தேடிக்கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கவேண்டும்.

உ.அடிமைத்தனத்திலிருப்பவர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும்

நம்மை சுற்றிலுமுள்ள அநேகர் சாத்தானின் அடிமைத்தனத்திலிருக்கிறார்கள். நாம் மிருகங்களை கட்ட வைப்பது போல சாத்தான் அவர்களை கட்டி வைத்திருக்கிறான். இந்த அடிமைத்தனத்தை முறிப்பது கடினமாகும். உலகத்தின் சக்திகளாய் அவைகளை முறிக்கமுடியாது. இந்த அடிமைத்தனங்களை முறிப்பதற்கு தேவன் தமது பிள்ளைகளுக்கு வல்லமை அளித்திருக்கிறார். சில மக்களுக்குள் மட்டுமே இந்த வல்லமை இருக்கிறதென்று நினைக்கிறார்கள். ஆனால் வேதத்தை படித்தால் தேவனை நேசிப்பவர்கள் அனைவருக்கும் இந்த வல்லமை அளிக்கப்பட்டிருப்பதை காணலாம்.

உயிர்தெழுந்த பிறகு இயேசு தமது சீஷர்களை நோக்கி, "நீங்கள் யாருடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்" என்றார் (யோவான் 20:3). தமக்கு பிதா அளித்த அதே வல்லமையை பாவத்தை மன்னிப்பதற்கும் இயேசு நமக்கு அளித்தார். ஆகவே அவரிடமிருந்து வல்லமையை பெற்றால் மட்டுமே நம்மை சுற்றிலுமுள்ளவர்களுக்கு விடுதலை கிடைக்கும். இந்த வல்லமையை தவறாக பயன்படுத்தவோ அல்லது பெருமைபடவோ கூடாது. மேலும் சிலர் செய்வதுபோல ஒரு சிலருக்கு மட்டும் விடுதலை அளிப்பதற்கு இந்த வல்லமை அளிக்கப்படவில்லை. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றவர்களை கட்டி எழுப்பவேண்டும்.

சிலர் வியாதியினால் அடிமைகளாக்கப்பட்டிருக்கிறார்கள். வியாதிகளிலிருந்து விடுதலை அளிப்பதற்கு இயேசு நமக்கு வல்லமை அளித்திருக்கிறார் "வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பவர்கள் அப்பொழுது அவர்கள் சொஸ்தமடைவார்கள்" (மாற்கு 16:18). "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை குணமாகும்" என்று யாக்கோபு கூறினார் (யாக்கோபு 5:15). முதற் நூற்றாண்டு சீஷர்கள் மூலம் நடந்தன. அநேகர் இயேசுவின் நாமத்தினால் குணமானார்கள். ஆனால் வருத்தப்பட வேண்டியது என்னவெனில் குணமடைந்தவர்கள் கிறிஸ்துவுக்குள் வளரவில்லை. மீண்டும் நோயாளியானார்கள். சிலர் இந்த சுக மளிக்கும் வல்லமையை பணத்திற்கும் புகழுக்காகவும் பயன் படுத்துகிறார்கள்.

இவைகள் எல்லவற்றையும் செய்ய வேதாகமம் நம்மை அனுமதிப்பதில்லை. இயேசுவின் நாமத்தினால் தேவனுடைய மகிமைக்கென்று சுகமளித்தல் நடைபெறுகிறது. இதைப்பற்றி நாம் விழிப்புணர்வோடிருக்க வேண்டும். ஏனெனில் தேவன் தமது மகிமையை யாருக்கும் கொடுப்பதில்லை. நமது வேலைக்காக நூறுமடங்கு பலன்களை அளிக்கிறார். இதற்கு மேல் எதற்கும் விரும்பக்கூடாது. அப்படி செய்தால் "விழுந்து போன தூதர்களைப் போல் நாமிருப்போம்". நமது ஊழியத்தின் மூலம் அவருடைய நாமம் மகிமைப்படுவதாக.

3.குருடர்களுக்கு பார்வையை அறிவிக்க வேண்டும் (லூக்கா 4:18)

அநேகர் நம்மை சுற்றிலும் இருளில் வாழ்கிறார்கள். இருளிலிருந்து வந்தவர்கள் (I பேதுரு 2:9). அவர்களை வழியும், சத்தியமும் ஜீவனுமாகிய இயேசுவிடம் நடத்தவேண்டும் (யோவான் 14:6). இயேசுவை அறியாமல், அநேகர் இருளில் வாழ்கிறார்கள். நாம் சத்திய வெளிச்சத்தை அவர்களுக்கு அளிக்கவேண்டும். அப்பொழுது இயேசு கூறியது போல உலகத்திற்கு வெளிச்சமா யிருப்போம் (மத்தேயு 5:14). இயேசு கூறிய முக்கியமான காரியம் என்னவெனில், குருடர் மற்றொரு குருடனுக்கு வழிகாட்ட முடியாது. அப்படி செய்தால் இருவரும் குழியில் விழுந்து விடுவார்கள். (மத்தேயு 15:14). ஆகவே அனுதினமும் வேத வசனமாகிய கண்ணாடியில் நம்மை குருடர் இல்லையா என்று பார்க்கவேண்டும்.

அடைய விரும்புகிறார்களே தவிர குருடர்களை பரலோகத்தில் சேர்க்க விரும்பவில்லை. பழமொழி கூறுவது போல பொதுமக்கள் கழுதையை போன்றவர்கள் அநேக குருடர்க்ள சத்தியம் என்ன வென்று அறியாமல் தலைவர்கள் பின்னால் செல்கிறார்கள். இறுதியில் குழியில் விழுகிறார்கள். இவர்களிடம் இயேசு "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லை கட்டி சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது நலமாயிருக்கும்" என்றார் (மத் 18:6).

4.ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலை

இன்று அநேகர் சாத்தானின் அடிமைத்தனத்திலும் கட்டு களிலும் சிக்கி தவிக்கிறார்கள். கென்னசரேத்து கடலருகே இயேசு கண்டறிந்த மனிதனைப் போல அநேகர் கூச்சலிடுகிறார்கள் (லூக்கா 8:27). இப்படிப்பட்ட பிசாசுகளை துரத்துவதற்கு இயேசு நமக்கு வல்லமை அளித்திருக்கிறார் (மாற்கு 16:17). விசுவாசத் தோடும் வல்லமையோடு ம் இந்த ஊழியத்தை செய்யவேண்டும். வட தென் இந்தியாவிலும் அநேகர் அடிமைத்தனத்திலிருக் கிறார்கள். விசுவாசிகளாகிய அநேகர் மேலும் கூட பிசாசு கிரியை செய்கிறான். இங்கு ஊழியம் செய்வது மிகவும் அபாய மானது.

நான் வடஇந்தியாவில் ஊழியத்தை துவங்கியபோது நேப்பாளிலுள்ள மீனா என்ற சகோதரியும் பீஹாரில் ராகேஷ் என்ற சகோதரனும் இருந்தார்கள். ஒரு நாள் அன்னம்மா ஜான்ஸன், காலஞ் சென்ற பாஸ்டர் P.D.ஜான்சன் (தலைவர் **A.G.**) ஜெபகூட்டத்தில் கலந்து கொண்டார்கள். உபவாச ஜெபத்தில் மீனா சகோதரி அசுத்த ஆவியினால் தாக்கப்பட்டிருந்தபோது துரத்த முயற்சித்தும் தோல்வி அடைந்தது. அதை போல் சகோதரர் ஸ்டீபன் ஜெபக்கூட்டத்தில் பங்கு பெற்றார். மீனாவும், ராஜேசும் பிசாசினால் தாக்கப்பட்டு அலைகழிக்கப்பட்டனர். கூட்டத்திலிருந்து அநேகர் கூச்சலிட்டபடியால் இங்கு ஜெபக்கூட்டம் நடத்த முடியாத நிலைக்கு வந்துவிட்டது என்றார்கள்.

(Our missionaries in Haryana)

இப்பொழுது நான் போபாலிலுள்ள சகோதரர் ஜாய் தாமஸை சந்தித்தேன். அனுபவமுள்ள மிஷனரியாக எல்லாவற்றையும் கூறினேன். அவர் ஒரு கேள்வி கேட்டார். இயேசுவும் சீஷர்களும் ஒரு முறைக்கு மேல் பிசாசை கடிந்து கொண்டார்களா?

அப்படி வேதத்தில் எங்காவது எழுதப்பட்டிருக்கிறதா? இதை வேதத்தில் எங்கும் நான் காணவில்லை. ஆகவே எனது உடன் ஊழியர்களிடம் பிசாசை சத்தமாய் கடிந்து கொள்ள வேண்டியதில்லை. நான் கையாளுகிறேன் என்றேன். அதன் பிறகு நான் ஒருமுறை கடிந்து கொண்ட பிறகு பிசாசு விரட்டப் பட்டது. பின்னர் திரும்ப வரவேயில்லை. அன்று முதல் இரண்டு ஆண்டுகளாக ஜெபக்கூட்டம் தவறாமல் நன்றாக நடைபெறுகிறது.

மற்றவர்களை போல நடிப்பது ஒரு கலை. நாமும் மற்றவர் களைப்போல் நடிக்க விரும்புகிறோம். முடிவில் தோல்வி அடைந்து புறஜாதிகள் மத்தியில் கேலி செய்யப்படுகிறோம். ஏனெனில் பிசாசின் கிரியைகளால் நாம் வெறுப்படைந்து புதிதாக ஜெபக் கூட்டத்திற்கு வருகிறவர்கள் வராமல் நின்றுவிடுகிறார்கள். "இப்படி நடந்தால் நானும் ஜெபக்கூட்டத்தில் கலந்து கொள்ள மாட்டேன்" என்று எனது மனைவியும் சொன்னாள். நடைபெற்ற தவறு என்னவெனில் நாம் வெளிநாட்டிலோ எங்கேயோ பார்த்தது போல கூச்சலிட்டு மற்றவர்களை போல நடித்து பிசாசை விரட்ட விரும்புகிறோம். நாம் வேதத்தை வாசித்து இயேசுவை அறிந்திருந்தாலும் வாழ்வில் தோல்வி அடைகிறோம். ஆகவே இந்த புத்தகத்தை வாசிப்பவர்கள் ஜாக்கிரதையாய் இருந்து உங்கள் வாழ்வில் நடக்காமலிருக்க எச்சரிக்கையாயிருங்கள்!.

★★★ ★★★

அத்தியாயம் 10

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம்

இயேசுவின் பன்னிரெண்டு சீஷர்களை தவிர எழுபது சீஷர்களும் இருந்தார்கள் என்று நாம் அறிந்திருக்கிறோம் (லூக்கா 10:1-3). "சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்தேன்" (லூக் 10:19). இந்த உணர்வுடன் சுவிசேஷப்பணியை நாம் செய்யவேண்டும். நமது ஊழியம் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றிருக்கவேண்டும். இயேசுவின் நாமத்தில் சிறிய ஜெபத்தை செய்தாலும் அதற்கு அபிஷேகம் கட்டாயம் வேண்டும். இல்லாவிட்டால் சத்துரு வாய்ப்புகளை தனக்காக பயன்படுத்திக்கொள்வான். தேவனுடைய ராஜ்யத்தின் பணியை அழிப்பதே அவனுடைய நோக்கமாகும். ஆகவே நாம் நெகேமியாவைப் போல் ஊழியம் செய்யவேண்டும். "ஒரு கையினாலே வேலை செய்து மறு கையினாலே அயுதம் பிடித்திருந்தார்கள்" (நெகே 4:19).

பரலோகத்திலிருந்து அபிஷேகத்தை பெறும்போது நமது நடவடிக்கைகள் மாற்றம் அடைகிறது. நாம் வெளியே காண்பிக்கா விட்டாலும் உட்புறத்தில் பெருமை காணப்படுகிறது. "நீங்கள் பிசாசை துரத்திவிட்டீர்கள் என்பதை விட உங்கள் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பதே முக்கியம்" என்று இயேசு கூறினார் (லூக்கா 10:20). ஆவியில் பெருமையா யிருப்பது முரண்பாடானதாகும். தேவன் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார். இப்படித்தான் தேவனுக்காக துதிபாடல்களை பாடும் தூதன் பட்டயத்தினால் காயப்பட்டு பூமிக்குள் தள்ளப்பட்டான். ஆகவே உங்கள் ஊழியம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் சரி அதற்கு பின்னால் பெரிய அபிஷேகம் காணப்படவேண்டும். இல்லாவிட்டால் ஒரு கிளையைப்போல் வெட்டிவிடுவார். செடி காய்ந்து விடும் (யோவான் 15:6). "அந்த கிளைகளுக்கு விரோதமாக பெருமைபாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானால் நீ வேரை சுமக்காமல் வேர் உன்னை சுமக்கிறதென்று நினைத்துக் கொள்" (ரோமர் 11:20-21). ஒரு காலத்தில் வல்லமையாக பயன் படுத்தப்பட்ட ஊழியர்களின் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தால் இதை அறியலாம். உலகத்தில் அவர்கள் அறியப்பட்டிருந்தாலும் அவர்களுடைய அபிஷேகம் மங்கிப்போனது. இந்த சத்தியத்தை அறிவதற்கு அவர்களுடைய ஊழியத்தின் பிள்ளைகளை அறியலாம். அவர்களில் பத்துபேரை பார்த்தால் அதில் ஐந்து பேர் அதே அபிஷேகத்தில் தொடர்ந்து ஊழியம் செய்கிறார்கள்.

"இப்படியிருக்க தன்னை நிற்கிறேன் என்று சொல்லுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்ககடவன்" (I கொரி 10:12). இந்த உலகம் தாக்கப்படக்கூடியது. எனவே இயேசுவின் கரங்களை பிடித்துக்கொண்டு செல்லாவிட்டால் விழுந்து விடுவீர்கள்.

நான் பிறந்து வளர்ந்த மலைப்பகுதிகளில் மழைக் காலத்தில் ஜாக்கிரதையாக நடக்காவிட்டால் வழுக்கி விழுந்து விடுவீர்கள். இங்குள்ள மக்கள் இதை அறிந்து கவனமாய் நடப்பார்கள். எங்கள் உறவினர்கள் இதை அறியாமல் நன்றாக ஆடைகளை அணிந்து, எச்சரிக்கைகளை மீறியதால் விழுந்து அசுத்தமடைந்தார்கள். அதைப்போலவே தேவனுடைய ஊழியர் களும் விசுவாசிகளும் ஆவிக்குறிய நிலத்தில் வழுக்கி விழுந்து, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை பாழாக்குகிறார்கள். "நீங்கள் சோதனைக்குட்படாத படிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" என்று இயேசு கூறினார் (மத்தேயு 26:41). ஆகவே உலகத்தில் நான் முன்பாகவும், பின்பாகவும், வலது புறமும் இடது புறமும் செல்லும் போது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

பெருமையை எளிதாக கையாளாமல் ஒரு புற்றுநோயை கையாளுவது போல தீர்வுகாணவேண்டும். இல்லாவிட்டால் சாத்தான் நமது குடும்பம், வாழ்க்கை மற்றும் ஊழியங்களை திருடி செல்வான். ஒவ்வொரு நாளும் தேவனுடைய ஊழியராக தேவனுடைய "ஊழியன்" என்ற மருந்தை பெற்று எஜமானை விட ஊழியன் பெரியவன் அல்ல என்பதை நினைத்துக் கொள்ள வேண்டும். இந்த உலகத்திலிருந்து பரலோகத்தை நோக்கி நாம் பயணம் செய்யும்போது எதிரி நமக்கு முன்பாக பணம், பெண்கள், புகழ் போன்றவைகளை தடைகளாக கொண்டு வருகிறான். ஆகவே இவைகளை எப்படி சமநிலையாக கையாள வேண்டு மென்று அறியவேண்டும்.

பணம்: "பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவிப் போகிறார்கள்" என்று பவுல் கூறுகிறார் (I தீமோ 6:10). ஆகவே, அதிகமான பணம் நம்மிடம் இருந்தால் மற்றவர்களுக்கு பகிர்ந்தளித்தால் ஆவிக்குறிய முறையில் வளரவும் நல்ல சாட்சியாகவும் இருப்போம். கண்ணை மூடிக்கொண்டு கொடுப்பது என்றால் என்ன? நமது பணம் எங்கே போகிறதென்று நமது மனமும் மனசாட்சியும் அறியக்கூடாது. நாம் அறிந்தால் நமக்கு அது அபாயத்தை வருவிக்கும்.

அறிமுகமானவர்களுக்கு மட்டும் கொடுக்கிறார்கள். பிரச்சனைகள் எழும்பும்போது தேவனை சார்ந்திருக்கும்போது பணம் கொடுத்த இந்த பிள்ளைகளை சார்ந்திருக்கிறார்கள். ஏனெனில் பணத்தை கொடுத்த இவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். "இவர்கள் நன்றாக வளருவதற்கு நான் உதவி செய்தேன்" என்று கூறுகிறார் கள். சாத்தான் இந்த அதிகாரத்தை தூண்டிவிடுகிறான். வலது கை கொடுப்பதை இடது கை அறியாமலிருப்பதைத்தான் தேவன் பாராட்டுகிறார்.

இதனால் தான் இயேசு சாத்தானிடம் பணியவே இல்லை. இதனால் இயேசு இந்த உலகத்தில் ஒன்றையும் சம்பாதித்து சேமிக்கவில்லை. "நரிகளுக்கு குழிகளும் ஆகாயத்து பறவை களுக்கு கூடுகளும் இருக்கிறது. மனுஷ குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை" என்று இயேசு கூறினார் (மத்தேயு 8:20). அநேக ஊழியர்களை போல அவர் சாத்தானிடம் வியாபார நோக்கத்துடன் விலை பேசியிருக்கலாம். அவர் அப்படி செய்திருந் தால் கஷ்டப்பட்டிருக்கத் தேவையில்லை. அவரே அப்படி செய்ய வில்லையெனில் நாமும் செய்யக்கூடாது. நாம் தேவனிடமிருந்து பணத்தை பெற்று, உண்மையாக செலவழித்து, நம்முடைய பணம் அல்ல என்று உணர்ந்து அதன்மேல் அதிகாரம் செலுத்தக் கூடாது. வங்கியில் கணக்கு வைத்திருப்பது போல நாம் பணத்தை கையாள்கிறோம்.

நான் பல்வேறு கம்பெனிகளில் கணக்காளராக பணியாற்றி யிருக்கிறேன். என் முதலாளிக்கு ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். எனது விருப்பத்தின்படி பணத்தை செலவழிக்கமுடியாது. எனது முதலாளியின் அறிவுரை மூலமாகவே செய்யமுடியும். அதை போலவே நமது கரங்களில் வரும் பணங்கள் நம்முடையதல்ல தேவனுடையது. பணத்தை தேவனோடு கலந்து ஆலோசித்து செலவழிக்கவேண்டும். மற்றவர்களுக்கு கொடுக்கும் போதும் இந்த பணம் தேவனுடையது என்ற உணர்வு இருக்கவேண்டும்.

மிஷனரி நிறுவனங்களிலும் சபைகளிலும் வித்தியாசமான அதிகாரத்தை நாம் பார்க்கமுடிகிறது. ஊழியத்திற்கென்று அளிக்கப்பட்ட பணத்தினால் அநேக மிஷனரிகள் கட்டப்பட்டிருக் கிறார்கள். "அவனை கட்டவிழ்த்து விடு; அவன் போகட்டும்" (யோவான் 11:44). இது இயேசுவின் கட்டளையானபடியால், நமக்கு விடுதலையிருப்பதால் பிறகு நாம் ஏன் மற்றவர்களை கட்டுப்படுத்தவேண்டும்?.

அநேக மிஷனரிகள் உற்சாகமாய் ஊழியம் செய்துவிட்டு, தற்போது வாஞ்சை குறைந்து காணப்படுகிறார்கள். சிலர் ஏமாற்றத்தினால் ஊழியத்தை விட்டு சென்றுவிட்டார்கள். கேரளாவிலுள்ள அநேகர் வடமாநிலத்தில் ஊழியம் செய்து திரும்பினார்கள். ஏனெனில் ஊழியம் செய்வதற்கு சுதந்திரம் அளிக்கப்படவில்லை. இதனால் சுவிசேஷப்பணி செய்வதற்கு தடையாக உள்ளது.

பெண்கள்;

சுவிசேஷப்பணியில் இயேசுவின் காலம் முதல் இன்று வரைக்கும் பெண்கள் முக்கிய இடம் வகித்திருக்கிறார்கள். எங்கு சென்றாலும் பெண்கள் தான் சுவிசேஷப்பணிக்கு கதவை திறந்து இயேசுவையும் ஏற்றுக்கொள்கிறார்கள். மேலும் சுவிசேஷப் பணிக்கு பெண்களே ஜெபத்திலும் பொருளுதவியிலும் முதலிடம் வகிக்கிறார்கள். ஏனெனில் பெண்களுக்குள் தேவன் இரக்கத்தை யும், மனதுருக்கத்தையும் அளித்திருக்கிறார்கள். இதை சாத்தான் தவறாக பயன்படுத்தி தன்னை ஒளியின் தூதனாக பிரதிபலிக் கிறான். "மின்னுவதெல்லாம் பொன் அல்ல". இயேசுவைப் போல் எல்லா ஊழியர்களும் இல்லை என்பதை பெண்கள் அறிய வேண்டும். எல்லா ஊழியர்களும் சரியாக மாறிவிட்டால் எல்லாம் நன்றாக மாறிவிடும். கடைசி நாட்களில் ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்கள் எழும்புவார்கள். "என் நாமத்தினால் அநேகர் வருவார்கள், அவர்களை கண்மூடித்தனமாக பின்பற்றாதீர்கள்" (லூக்கா 21:8).

தேவனுடைய ஊழியர்கள் இதை மனதில் வைத்து செயல் படவேண்டும். ஏனெனில் பெண்கள் தேவனுடைய ஊழியத்தில் இன்றியமையாதவர்கள். இவர்கள் மூலம் சாத்தான் கிரியை செய்கிறான். ஆகவே நமது எஜமானின் பெயருக்கும் கலங்கத்தை ஏற்படுத்தும் எந்த செயலிலும் ஈடுபடாமல் ஜெபிக்கவேண்டும். மோசே வெண்கல சர்ப்பத்தை மக்கள் மத்தியில் உயர்த்தியது போல இயேசுவை உயர்த்துவதே நமது நோக்கமாயிருக்க வேண்டும். இதற்கு எதிராக செயல்பட்டால் தேவன் நம்மை தண்டிப்பார். பெண்களை சந்திக்க செல்கிறவர்கள் கூட யாராவது செல்லவேண்டும்.

அநேக பெண்கள் வடமாநிலத்தில் என்னோடு ஊழியம் செய்கிறார்கள். அவர்களில் ஆண்களை விட திறமைசாலிகள். உத்திரப்பிரதேசத்திலுள்ள சகோதரி ரசானா என்ற பெண் மிஷனரி சிறந்தவர்கள். அவர்கள் இளம் வயதில் திருமணமாகி இரண்டு பிள்ளைகளுக்கு தாயாக இருக்கிறார்கள். இரண்டாவது பிள்ளை பிறக்கும் நேரத்தில் அவள் உடல்நிலை மோசமாக காணப்பட்டாள் மேலும் மருத்துவம் பார்த்தும், பூஜைகள் செய்தும் சுகம்

ஏற்படவில்லை. அப்பொழுது இயேசுவை குறித்து கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டு பரிபூரண குணமடைந்தாள். இரட்சிக்கப்பட்ட ஆரம்பத்தில் பல்வேறு சோதனைகளையும் கஷ்டங்களையும் அனுபவித்தார்கள். அப்பொழுது அவர்களை நான் சந்தித்தேன்.

இயேசுவின் மேலுள்ள அவர்களுடைய வாஞ்சையை கண்டு கல்வி அறிவு குறைவாக இருந்தபோதிலும், எங்களுடைய மிஷனரி நிறுவனத்தில் ஏற்றுக்கொண்டோம். அவர்களுடைய கணவரும் கூட என்னை நேசித்தால் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார். இன்று அவர்கள் குடும்பமாக என்னை நேசித்து என்னை கவனித்துக்கொள்கிறார்கள். நான் உத்திர பிரதேசத்தில் சென்றால் அவர்களுடைய வீட்டில் தங்கி ஜெபக் கூட்டம் நடத்துகிறேன்.



(Sister Rachana Chandan and her famiy, Bareilly, U.P)

அவர்களிடத்தில் அளிக்கப்படும் பொறுப்புகளை கடினமாயிருந் தாலும் ஏற்றுக்கொள்வார்கள். சுவிசேஷத்தை எதிர்ப்பவர்களிட மிருந்து பயமுறுத்தல்கள் இருந்தபோதிலும் கர்த்தரின் ஊழியத்தை தொடர்ந்து செய்து ஆண்கள் மிஷனரிகளுக்கு மாதிரியாயிருக்கிறார்கள். "ஐயா நீங்கள் உத்திரபிரதேசத்தில் எங்கு சென்றாலும் உங்களோடு வருகிறேன், ஏனெனில் ஒரு பெண் உங்களோடு வந்தால் எளிதாயிருக்கும்" என்று என்னிடம் கூறினார்கள். ஆனால் அநேக ஊழியர்கள் பெண்கள் விவகாரத்தில் இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் விழுந்து விட்டதால் ஒருபோதும் என்னுடன் அழைத்துச் சென்றதில்லை. இதை ஏன் எழுதுகிறேன் என்றால் சாத்தானுக்கு ஒருபோதும் வாய்ப்பு அளிக்காதீர்கள்.

பெயரும், புகழும்:

"இயேசுவுக்கு ஊழியம் செய்கிறவர்களை நண்பர்களாகவும், தாயாகவும், சகோதரர் மற்றும் சகோதரிகளாகவும் ஏற்றுக் கொள்கிறார்" (மத்தேயு 12:50). இவரைப்போல உலகத்தில் யாரையும் காணமுடியாது பொதுவாக முதலாளி தனது விரலினால் அனைவரையும் கட்டுப்படுத்துகிறார். ஆனால் இயேசு "என்னை விசுவாசிக்கிறவன் என்னிலும் பெரிய காரியங்களை செய்வான்" என்றார் (யோவான் 14:12). ஆனால் சீஷன் தனது எஜமானை விட பெரியவனல்ல என்பதை அறியவேண்டும். இல்லாவிட்டால் சாத்தான் இந்தவாய்ப்பை பயன்படுத்தி இயேசுவுக்கும் ஊழியத்துக்கும் தீயபெயரை கொண்டுவருவான். அநேகர் பாலத்தை கடக்கும்வரை இயேசுவின் பெயரை கூப்பிடுவார்கள். முடிந்த உடன் தாங்கள் அழைத்தவரை அறிவதில்லை. சாத்தான் இவர்களுடைய கண்களை குருடாக்கி சிகரத்தின் உச்சியின் மேல் வைத்திருக்கிறான். ஆதாமுக்கு அளித்த சுதந்திரம் அபாயமானது. நமது சுதந்திரமும் கூட அபாயமாகலாம். ஆகவே நாம் தகுதியற்ற ஊழியர்கள் என்றும் செய்ய வேண்டிய ஊழியத்தையே செய்கிறோம் என்று உலகத்திற்கு அறிவிக்க வேண்டும் (லூக்கா 17:10).

பொதுமக்கள் ஊழியர்களை "சிறிய கடவுள்களாக" மாற்றி விடுகிறார்கள். தேவன் தமது மகிமையை ஒருவருக்கும் கொடுக்க விரும்பவில்லை. ஊழியங்கள் இதை புரிந்து கொண்டு அப்போஸ்தலர்களை போலிருப்பவர்களுக்கு "நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது எங்கள் சுயபக்தியினாலாவது இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன" என்று (அப் 3:12). கூற வேண்டும். இதைச் செய்யவில்லையெனில், நாம் பரலோகத்திற்கு அவர்களை அழைத்து செல்லாமல் தகுதியற்றவர்களாக மாற்றி விடுவோம். பவுலின் எச்சரிப்பு நீங்கள் இந்த உலகத்திற்கேற்ற வேஷந்தரியாமல் உங்கள் மனம் புதிதாடுகிறதினாலே மறுரூபமாயிருங்கள், அப்பொழுது தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வீர்கள்" என்றார் (ரோமர் 12:2).

மறைதிரு. ஜோசப்ஜான் சென்னையில் தேவன் அவரை வல்லமையாக பயன்படுத்தினார். அநேக மக்கள் வேப்பேரியில் அவருடைய கூட்டத்தில் கலந்து கொள்வார்கள். மக்கள் தீர்க்க தரிசனங்களையும், சுகத்தையும் பெற்றுக்கொண்டார்கள். மக்கள் அவரை ஒரு சிறிய கடவுளாகவே பார்த்ததால் சென்னையில் பிரபல்யமானார். திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு மரித்துப் போனார். தனது இளம்வயதில் மரித்ததால் விசுவாசிகளுக்கு அதிர்ச்சியானது. பெரும்பாலானோர் பின் வாங்கிப்போனார்கள். இவைகள் மூலம் தேவன் நம்மை எச்சரிக்கிறார். நம்மை பார்த்து நான் மரித்துப்போனால் எனது ஊழியத்துக்கும் மக்களுக்கும் என்ன சம்பவிக்கும் அவர்களுடைய எதிர்காலம் எப்படி இருக்கும்?" என்று கேட்கவேண்டும்.

இயேசுவை அறிந்து ஏற்றுக்கொள்வதற்கு முன்பு உலகத்தின் வழிமுறைகளிலும் நோக்கங்களிலும் தேவனை தேட முயற்சித்தோம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஆனால் இன்று தேவன் ஆவியாக நமது மத்தியிலிருக்கிறார் "தேவன் ஆவியாயிருக்கிறார், தேவனை தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்" (யோவான் 4:24). நமது இருதயம் நாம் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே நமது பெற்றோர்கள், போதகர்கள் திருச்சபைகளை விட நமது வாழ்வை தேவனுக்கு அர்ப்பணிக்கவேண்டும். "தகப்பனையாவது, தாயை யாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல, மகனையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல" (மத்தேயு 10:37). நமக்காக ஜீவனை கொடுத்த கர்த்தரே தகுதியானவர் (வெளி 5:12).

வெளிப்படுத்தலில் கூறப்பட்டு ஏழு திருச்சபைகள் இன்றுள்ள திருச்சபைகளுக்கு ஒப்பனையாக உள்ளது. எல்லா திருச்சபைகளும் நன்றாக. ஆரம்பிக்கப்பட்டாலும் தங்கள் ஆதி அன்பின் அர்ப்பணிப்பை இழந்து விட்டார்கள் (வெளி 2:4). அநேக சபைகளுக்கு பெயரும் புகழும் இருந்தபோதிலும் தேவனுடைய ஆவியை இழந்ததினால் மரித்துப்போயிருக் கிறார்கள். "நீ விழித்துக்கொண்டு சாகிறதற்கேதுவாயிருக்கிறவை களாக ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்கு முன் நிறை வுள்ளவைகளாக நான் காணவில்லை" (வெளி 3:2). இந்த கடைசி

காலங்களில் எழும்பி தேவனுக்காக கெர்ச்சிக்கிற எல்லா திருச்சபைகளையும் ஊழியர்களையும் தேவன் ஆசீர்வதிப்பார். ஆகவே தனிநபர்கள், குடும்பங்கள், திருச்சபைகள் அனைவரும் பெரிய மாற்றத்திற்காக நம்மை சுற்றிலுமுள்ள மக்களை நோக்கி முன்னறே செல்லவேண்டும்.

★★★ ★★★

அத்தியாயம் 11

இயேசு நிறுவிய தேவனுடைய ராஜ்யம்

இயேசு நிறுவ விரும்பிய தேவனுடைய ராஜ்யத்தை குறித்த தரிசனத்தை திருச்சபைகளும் விசுவாசிகளும் பெற்றிருக்க வேண்டும். இல்லாவிட்டால் கர்த்தருடைய நாமம் இருந்த போதிலும் உலகத்தின் வழிகளில் செல்வார்கள். இயேசு நிறுவிய தேவனுடைய ராஜ்யம் உலக பிரகாரமானதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரிய தானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே, இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" (யோவான் 18:36). "அப்போஸ்தலர் நட படிகளில் ஆதி சீஷர்கள் இதை பின்பற்றியதை காணலாம்" (அப் 4:32-35). ஆகவே நாமும் அதை பின்பற்ற வேண்டும். ஏனெனில் உலகம் நமது மூலமாக தேவனுடைய ராஜ்யத்தை எதிர்பார்க்கிறது. உலகத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்தால், நாம் தேவனுடைய வார்த்தைக்கு எதிராக இருக்கிறோம். இந்த உலகத்தில் நாம் பரலோகத்தின் செய்தித்தாள்கள் என்பதை உணர வேண்டும்.

உலகமக்கள் உலகத்தின் செய்திகளை தொலை காட்சியிலும் செய்தித்தாள்கள் மூலமாக செய்திகளை அறிந்து கொள்வதுபோல இயேசுவை பின்பற்றுகிறவர்கள் மூலமாக மட்டுமே இயேசுவை அறிவார்கள். இயேசுவின் அன்பையும், கரிசனையையும் அந்தியோகியாவில் பார்த்த மக்கள் அவர்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்தார்கள் (அப் 11:26). ஆகவே. இந்த உலகத்திலுள்ள நமது வாழ்க்கை ஒரு அர்ப்பணிப்போடு இருக்க வேண்டும். இந்த உணர்வோடு எத்தனை விசுவாசிகளும் சீஷர்களும் வாழ்கிறார்கள்?. நாம் உண்மையாக அலசிபார்த்தால் எண்ணிக்கை குறைவாகவே காணப்படும். அநேக சபைகளும் விசுவாசிகளும் இயேசுவிடம் உறவு இல்லாமல் விக்கிரக ஆராதனையில் செயல்படுகிறார்கள். தேவன் நமது விசுவாச வாழ்வில் சமரசமாயிருப்பதில்லை. ஆபிரகாமைப்போல ஒரு சிலர் தேவனுடைய கட்டளைக்கு கீழ்படிகிறார்கள். "பயப்படாதே, சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக்கா 12:32). ஆகவே நலம் புரிந்து கொண்டு விக்கிரக ஆராதனையை விட்டு விலகியிருக்க வேண்டும்.

மோசேக்கு தேவன் பத்து கற்பனைகளை கொடுத்தார். அதில் இரண்டாம் கற்பனை விக்கிரக ஆராதனைப்பற்றி கூறுகிறது. "என்னையன்றி வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம், மேலே வானத்திலும், கீழே பூமியிலும் பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்" (யாத் 20:3-5). இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் விக்கிரகங்களை வணங்குவதற்கு வேதம் அனுமதிப்பதில்லை. இயேசு இந்த உலகத்திலிருந்த போது "என்னை ஏன் நல்லவர் என்று அழைக்கிறாய்கள்? தேவன் ஒருவரைத் தவிர நல்லவர் இல்லையே" (லூக்கா 18:19) என்றார்.

யெகோவா சாட்சிகள் இந்த வசனத்தை வைத்து விசுவாசி களை தவறாக நடத்துகிறார்கள். இயேசு இந்த உலகத்தில் பாவத்தை தவிர மற்றுள்ள எல்லாவற்றிலும் நம்மைப் போல வாழ்ந்தார். முழு மனுக்குலத்திற்காக மனுஷசாயலானார். இயேசுவை சரீர தோற்றத்தில் ஆராதிக்கும் வேதம் கூறவில்லை. ஆவியாயிருக்கும் உயிர்தெழுந்த கர்த்தரை ஆராதிக்கும்படி வேதம் கூறுகிறது. "சிங்காசனத்தையும், ஜீவன்களையும், மூப்பர் களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தை கேட்டேன். அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் ஆயிரமாயிருந் தது. அவர்கள் மகாசத்தமிட்டு, அடிக்கப்பட்ட ஆவியானவர், வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலனையும், கனத்தையும், மகிமையும், ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ள பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்" (வெளி 5:11-12). ஆகவே பாத்திரராகிய இயேசுவை மட்டும் ஆராதிக்கவேண்டும்.

ஆனால் இன்று சிலைகளையும் இயேசுவின் படங்களையும் உலகத்தில் ஆராதிக்கிறார்கள். உயிர்த்தெழுந்த இம்மானு வேலாகிய கர்த்தரை ஒரு சிலரே அறிந்திருக்கிறார்கள். இதனால் தான் யெகோவா சாட்சிகள் விசுவாசிகளை வஞ்சிக்கிறார்கள். சத்தியத்தை அறிந்திருக்கிற நாம் விழிப்பாயிருக்கவேண்டும். இயேசுவின் ஆவியை அறியாத சிலருடைய வசதியான வாழ்வை நாம் சில நேரங்களில் பார்க்கும்போது பரலோகத்தை வார்த்தை களால் விவரிக்கமுடியாது என்று உணருகிறோம். திருச்சபைகளை நினைவுச்சின்னங்களாக கட்டிடமாக கட்டுவதே இவர்களுடைய பிரதான நோக்கமாகும்.

எபேசியரின் நிரூபத்தில் பவுல் வித்தியாசமான விக்கிரக ஆராதனைக்காரரைப் பற்றி கூறுகிறார் "விபச்சாரக்காரனாவது. அசுத்தனாவது, விக்கிரக ஆராதனைக்காரனாகிய பொருளாசைக் காரனாவது கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்திரமடைவதில்லை யென்று அறிந்திருக்கிறீர்களே" என்றார் (எபேசியர் 5:5). இங்கு பணத்தை மனதில் கொண்ட அதிகபட்சமான மக்களைப்பற்றி சுட்டிக்காட்டுகிறார். இவர்களுக்குள் கர்த்தராகிய இம்மானுவேலை அறிந்தவர்களும் இருக்கிறார்கள். கர்த்தரிடமிருந்து உண்மையாக பணம் கிடைத்தால் நல்லது. ஆனால் பணத்தை நேசித்து ஆராதிக்காதீர்கள். "ஏனெனில் பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது". சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி போனார்கள். மனுஷரை கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளில் விழுகிறார்கள் (I தீமோ 6:9). வெளிப்புறத்தின் விக்கிரகங்களை அகற்றுவதை விட உட்புறத்திலுள்ள விக்கிரகங்களை அகற்றுவது கடினமாகும். புறம்பே இருப்பவர்கள் இரண்டையும் புரிந்து கொள்வது கடினமாகும். ஆனால் "பரலோகத்திற்கும் நமது தேவன் அந்தரங்கங்களை ஆராய்ந்து அறிகிறவர்" (சங்கீதம் 139:2).

"பொருளாசை" என்ற மற்றொரு விக்கிரகத்தைப் பற்றி பவுல் கொலோசேயர் நிருபத்தில் கூறுகிறார். "விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரக ஆராதனையான பொருளாசை. ஆகிய இவைகளை பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயங்களை அழித்து போடுங்கள்" (கொலோ 3:5). உலகத்திலுள்ள எல்லாருக்குள்ளும் பொருளாசை என்ற விக்கிரக ஆராதனை காணப்படுகிறது. எல்லாவற்றையும் விட்டு தேவனுடைய வார்த்தையின்படி ஒருவர் வாழ விரும்பினாலும் இந்த பாவம் உள்ளே வரும். பவுல் சொல்வது போல, எத்தனை பேர் ஆடைகள், உறைவிடங்கள் மற்றும் உணவினால் திருப்தி அடைந்திருக்கிறார்கள். இந்த நிலைக்கு ஒருவன் வருவதற்கு மிகவும் கடினமாய் ஜெபிக்கவேண்டும். இதைத்தான் சுயத்தை சாகடித்தல் என்று பவுல் சுட்டிக்காட்டுகிறார். புறம்பே இருப்பவர்கள் இதை அறியாவிட்டாலும் சர்வவல்லமையுள்ளவர் நமது இருதயங்களை ஆராய்ந்து அறிகிறார். ஆகவே உபவாச ஜெபத்தினால் இவைகளை அகற்றிவிட்டு தேவன் மகிழ்ச்சி அடையலாம்.

இடையே உள்ள வித்தியாசத்தை தெளிவாக அறியவேண்டும். உதாரணமாக, ஒருவனுக்கு சொந்தவீடு கிடைத்து விட்டால் மேலும் கிடைப்பதற்கு முயற்சித்தால் அது பொருளாசையும் விக்கிரக ஆராதனையுமாக உள்ளது. உலக சிற்றின்பங்களின் ஆசைகளை நாம் கட்டுப்படுத்தாவிட்டால் நாம் நியாயத் தீர்ப்பு நாளில் திருப்தியற்று காணப்படுவோம்.

நமது மனதிலுள்ள விக்கிரங்களை நமது சொந்த சக்தியினால் அகற்ற முடியாது. ஆனால் குயவனின் கைகளில் களிமண்ணைப் போல நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அவர் நம்மை புதுப்பித்து வனைந்து எடுப்பார் என்ற வாக்குத்தத்தம் வேதத்தில் உள்ளது. "குயவன் வனைந்து கொண்டிருந்த மண் பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போனது. அப்பொழுது அதை திருத்தமாய் குயவன் அதை திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான்" (எரேமியா 18:4-6). ஆகவே நமது குறைவுகளை கர்த்தருடைய கரங்களில் ஒப்படைக்க வேண்டும். அப்பொழுது கடினமான காரியங்களில் தேவன் வெற்றி அளிப்பார்.

மேலே கூறிய வார்த்தையை போல இயேசு பிலாத்துவிடம், அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பதிலாக, நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான். சத்தியத்தை குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன். "இதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தேன். சத்தியவான் எவனும் என்சத்தம் கேட்கிறான் என்றும் (யோவான் 18:37). இதிலிருந்து இயேசுவின் முகமே சத்தியம் என்று அறியலாம். அவர் உலகத்திலிருந்த போது அவர் சத்தியத்தில் வாழ்ந்து சத்தியத்திற்காக மரித்தார். ஆகவே இயேசு காண்பித்த எல்லா சத்தியங்களையும் நாம் பின்பற்ற வேண்டும். வருத்தமான காரியம் என்னவெனில் அநேக கிறிஸ்தவர்கள் நேர்மையில்லாமல் வாழ்கிறார்கள். சத்தியத்தை நாம் கடை பிடிக்காவிட்டால் நாம் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் அல்ல.

அநேகர் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்ததால், வளர்க்கப்பட்டதால், அல்லது சபையில் உறுப்பினர்களாயிருப்பதால் நமக்கு இரட்சிப்பு கிடைக்கும் என்று நம்புகிறார்கள். சிலர் தாங்கள் பாரம் பரியங்களை பாராட்டுவதின் மூலம் இதை அறியலாம்.

வேதத்திலிருந்தும் இயேசுவை அறிந்தவர்களின் சாட்சியிலிருந்தும் இது முட்டாள்தனம் என்று அறியலாம். இயேசுவின் இரண்டாம் வருகையில் சபையாகவோ குடும்பமாகவோ எடுத்துக் கொள்ளப்படாமல் தனி நபர்களாகவே எடுத்துக் கொள்ளப் படுவோம் (மத்தேயு 24:40).

அல்லேலூயா என்று பாடி தேவதூதர்களை போல நடப்பவர்கள் இரட்சிப்பை கண்டறிவதில்லை. ஆனால் சிலர் வெளிப்புறத்தில் கிறிஸ்தவர்கள் போலிராவிட்டாலும் இருதயத்தில் இயேசுவை ஏற்றுக்கொண்டால் இரட்சிப்படைவார்கள். வெளிப் புறத்தில் அல்ல உட்புறத்தில் கிறிஸ்தவர்களாயிருப்பவர்களே உண்மையாக பின்பற்றுகிறவர்கள் என்று வேதம் கூறுகிறது. அவர்கள் கொடுக்கும் கனிகளால் அதை அறியலாம் (மத்தேயு 7:17). நமது நாடு முழுவதும் 3000 கிறிஸ்தவ ஐக்கியங்களிருப்ப தாக நான் அறிந்திருக்கிறேன். அதைப்போலவே பதிவேட்டில் பெயர்களை சேர்க்காவிட்டால், இயேசுவின் மேலுள்ள அன்பினிமித்தமாக சுவிசேஷம் அவர்களை இரட்சிப்புக்கு பாத்திர வான்களாக மாற்றும்.

தேவன் நம்மோடு உயிர் வாழ்கிறார். (இம்மானுவேல்) என்பதில் சந்தேகமில்லை. ஆகவே தான் கடைசி நாட்களில், ராஜா அவர்களுக்கு மறுமொழியாக "மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர் களோ அதை எனக்கே செய்தீர்கள்" என்றார் (மத்தேயு 25:40). மேலும் அவர் "மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யா திருந்தீர்கள்" என்றார் (மத்தேயு 25:45). இதிலிருந்து நாம் புரிந்து கொள்வது என்னவெனில் இந்த சிறியவர்கள் மூலம் இயேசு ஜீவிக்கிறார் என்று அறியலாம்.

இந்த உலகத்தில் ஐசுவரியவான்களாயிருப்பவர்களை தான் மக்கள் மதித்து பணிவிடை செய்கிறார்கள். ஆனால் இது தேவனுடைய ராஜ்யத்துக்கு எதிரானது "இந்த சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு எதை செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள். நித்திய தண்டனைக்குள்ளாவீர்கள். ஆனால் நீதிமானோ நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பான்" (மத்தேயு 25:45-46) என்றார். ஆகவே இறுதி நியாயத்தீர்ப்பை எல்லோரும் நேரடியாக

கேட்கிறார்கள். அதற்கு நான் சரியான பதில் கூறுவது வெளிப்படுத்தலிலுள்ள ஏழு திருச்சபைகளை போல எல்லா திருச்சபைகளுக்குள்ளும் பல்வேறு குறைகள் உள்ளன. ஆகவே எந்த திருச்சபை கர்த்தருடைய வார்த்தையின்படி செயல்படுகிறதோ அதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். ஜீவனுள்ள வார்த்தையை இயேசுவின் பரிசுத்தத்துடன் மக்களுக்கு அளிக்கிறதே அதுவே சிறந்த திருச்சபையாகும். அப்போஸ்தலர் நடபடிகளை பார்க்கும் போது, ஆரம்பத்தில் புதிய ஆத்துமாக்கள் சபைக்குள் சேர்க்கப் பட்டார்கள். ஆனால் இந்தியாவில் ஒரு வருடத்துக்கு ஒரு ஆத்துமா கூட சபையில் சேர்க்கப்படுவதில்லை.

Rev. D.மோகன் பாஸ்டரின் புதுவாழ்வு திருச்சபையில் ஆறு ஆண்டுகள் உறுப்பினராயிருந்தேன். ஆழமான அன்பும் அர்ப்பணிப்போடும் நாற்பது ஆயிரம் மக்களுக்கு மேல் விசுவாசிகள் தமிழ்நாட்டிலுள்ள சென்னையில் ஆராதிக்கிறார்கள். பொதுவாக அற்புதங்கள் நடக்கும் சபைகளில் தான் ஏராளமான மக்கள் வருகிறார்கள். ஆனால் அவர் சிறிதளவே இதற்கு முக்கியத்துவம் அளிக்கிறார். சபையில் வருகிறவர்களுக்கு சிறிய செய்தியை அளிக்கிறார். ஆனால் சுவிசேஷ செய்தியை அளித்து மக்களை ஒப்புக்கொடுக்க வைத்து தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி மக்களை சம்மதிக்க செய்கிறார். இதனால் அவருடைய சபைக்கு செல்கிறவர்கள் தேவனுடைய ஊழியர்களாக மாறு கிறார்கள்.

எனது மனைவி சென்னையில் இராணுவ மருத்துவ மனைக்கு பணிமாற்றம் செய்யப்பட்டதால் அங்கு சென்றபோது அங்கு செவிலியராக பணியாற்றியவர். இந்த சபையின் உறுப்பினர். அவள் அனைவருக்கும் சுவிசேஷத்தை அறிவித்தாள். அதைப் போலவே அவருடைய செய்தி பெரிய தாக்கத்தை எனக்கு ஏற்படுத்தியதால் வட இந்தியாவில் நான் மிஷனரியாக பணியாற்றுகிறேன். அவருடைய சபையிலிருந்து அநேகரை இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் ஊழியத்திற்கு அனுப்பியிருக்கிறார். கர்த்தர் மேலும் சுவிசேஷத்தின் மேலுள்ள தாகத்தினாலும் கர்த்தர் அவரை ஆசீர்வதித்திருக்கிறார்.

இந்தியாவிலுள்ள திருச்சபைகளில் இப்படிப்பட்ட மாற்றங்கள் ஏற்பட்டால் இந்தியா விரைவில் சுவிசேஷ மையமாக்கப்படும். ஆனால் எத்தனைபேர் செய்ய ஆவலாயிருக்கிறீர்கள்? வருத்தமான காரியம் என்னவெனில் அநேகர் இதைப்பற்றி சிந்திப்பதே இல்லை. தங்கள் சபைகள் விசுவாசிகளை குறித்து சுயநலமாகவே சிந்திக்கிறார்கள். இயேசு விரும்பிய தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி சிந்திப்பதில்லை. ஆசிரியர் ஒரு தவறு செய்தால். மாணவன் ஐம்பத்தொன்று தவறுகள் செய்கிறான். அது தான் அவர்களுடைய வாழ்விலும் நடக்கும்.

இயேசு உலகத்திலுள்ள எல்லா சபைகளையும் ஏற்றுக் கொள்ள விரும்புகிறார் (யோவான் 17:23). பூமியில் நாம் எந்த சபையை சேர்ந்தவராயிருந்தாலும் நாம் நித்திய மணவாட்டி சபையில உறுப்பினராயிருக்கிறோம். இதனால் இயேசு தமது "விலையேறப் பெற்ற இரத்தத்தினால் நம்மை விலைக்கு வாங்கினார்" (I பேதுரு :19). பாவலோகத்தில் நாம் வாழ்ந்தாலும் அசுத்தமான பாவங்களிலிருந்து நம்மை விலக்கி காத்துக் கொள்ள வேண்டும். ஒரு மீன் உப்பு தண்ணீரில் வாழ்ந்தாலும் உப்பு மீனுக்குள் செல்வதில்லை.

"ஒருவரிலொருவர் நீங்கள் அன்பாயிருந்தால் அதினாலே என்னுடைய சீஷர்கள் என்று அறியப்படுவீர்கள்" என்று இயேசு கூறினார் (யோவான் 13:35). அநேக சபைகள் இந்த நிலைக்கு வரவில்லை என்பதே வருத்தமான காரியம். யாரையும் நாம் குறை சொல்ல முடியாத அளவில் சாத்தான் திருச்சபைகளை செல்வாக்காக மாற்றியுள்ளான். சுவிசேஷப்பணிகளை ஆரம்பித்த வர்களை பாரம்பரிய கிறிஸ்தவர்கள் குறைகூறுவது எல்லாம் ஒரே படகில் செல்வதை போலுள்ளது.

• இந்தியாவிலுள்ள திருச்சபைகள் எல்லாம் ஒருங்கிணைந்து இந்தியாவின் சுவிசேஷப்பணிக்கென்று செயல்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஏனெனில் இயேசுவின் இரண்டாம் வருகை சமீபமாயிருக்கிறது. அவர் வந்துவிட்டால் ஐசுவரியவான் பாதாளத் திற்கு சென்று மனந்திரும்பிய நிலைமை ஏற்பட்டுவிடும். நோவாவின் காலத்தில் ஏற்பட்டது போல கிருபையின் வாசல்களை தேவன் மூடிவிடுவார். அநேகர் உண்மையாய் மனந்திரும்பி

இந்த புத்தகத்தை வாசிக்கும் எல்லாரையும் ஆசீர்வதிப்பாராக. நமது மூலமாக தேவனுடைய ராஜ்யம் இயேசு விரும்பியது போல விரிவடைவதாக.

நமது பிரதான எதிரியாகிய சாத்தான் நம்மை காயப்படுத்தி, கர்த்தருடைய வேலையை தடை செய்துவிடுகிறான். ஆனால் சர்வ வல்லமையுள்ள கர்த்தர் நமக்காக யுத்தம் செய்கிறார். ஆகவே, இயேசுவையே நோக்கி ஓட்டத்தை ஓடவேண்டும். மனித கண்ணோட்டத்தின்படி பார்த்தால் முன்பு இருந்ததைவிட தற்போது வடஇந்தியாவில் சுவிசேஷம் எல்லா பகுதிகளிலும் பரவி வருகிறது. ஆகவே நாம் அனைவரும் புதுப்பிக்கப்பட்ட வாஞ்சையோடும், உற்சாகத்தோடும் இந்திய சுவிசேஷ மையமாக்கப்படுவதற்காக ஜெபிக்கவேண்டும்.

உங்களுடைய விலையுயர்ந்த அபிப்பிராயங்களையும், ஆலோசனைகள், அறிவுரைகளையும் ஆவலுடன் எதிர் பார்க்கிறோம். தேவன் தாமே தமது அளவற்ற அன்பினாலும் கிருபையினாலும் ஆசீர்வதிப்பாராக!.

ராய் வர்கீஸ்.

★★★ ★★★

(With our Missinaries in north India)

HARVEST TV
24x7

(Our TV Program will be telecasted on first and last Saturday of every month at 12 noon (IST) on Harvest TV)

Your valuable opinion and suggestions can be send to the following address :-

IMMANUEL MISSION TEAM

No.779, KOULA, JANDLI P.O., AMBALA CITY
HARYANA - 134005, INDIA.
Contact Number: 09501482423, 09884883990.
Website:immanuelmissionteam.in
E-mail:immanuelmissionteam2@gmail.com

இந்தியா ஏன் சுவிசேஷமையமாக்கப்படவில்லை?

ராய் வர்கீஸ்

நான் கம்யூனிஸ்டு பின்னணியில் வளர்ந்து B.sc முடித்த பிறகு இயேசுவை அறிந்து கொண்டேன். எனக்கு திருமணம் முடித்து பிள்ளை இல்லாத காரணத்தினால் இயேசுவிடம் நெருங்க ஆரம்பித்தேன்.

மேலும் தேவன் என் வாழ்வில் அற்புதம் செய்தார். நான் துபாயில் வேலை செய்து கொண்டிருக்கும் போது என் மகன் உடல் நலக்குறைவினால் பாடுபட்டான் டாக்டர்கள் கைவிட்டனர். நான் தேவனிடம் மன்றாடினேன் தேவன் எனக்கு ஒரு வார்த்தையை கொடுத்தார் என்னுடைய 40 வயதில் தேவனுடைய ஊழியக்காரன் ஆனேன்.

நான் வடஇந்தியாவில் அநேகமாநிலங்களில் தேவனுடைய வேலையில் ஈடுபட்டிருந்தபோது இந்த புத்தகத்தை எழுதினேன். இன்னும் ஆயிரக்கணக்கான கிராமங்களில் இயேசுவைப பற்றி அறிவிக்கப்பட முடியாத மிக முக்கிய காரணங்களை உணர்ந்து கொண்டேன். அதை இந்தப் புத்தகத்தில் எழுதியுள்ளேன். நீங்கள் இந்தியாவில் சுவிஷேசம் எப்படி அறிவிக்க வேண்டும் என்பதற்கு இந்தப் புத்தகம் உதவியாக இருக்கும்.

இம்மானுவேல் மிஷன் குழு
No.779, கௌவுலா, ஜன்லி,
அம்பாலாசிட்டி,
ஹரியானா 134005,
மொபைல் - 09501482423, 09884883990
Website:immanuelmissionteam.in
E-mail:immanuelmissionteam2@gmail.com